Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து


(C/1325)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (15.04.2012) பக்கங்கள் 20 ஓசை - 198
















# அதிகாரப் பகிர்வு வழங்க 13 ஆவது திருத்தம் அடிப்படை

## சோனியாவுடனான சந்திப்பில் ரணில்



(புதுடில்லி)

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு 13 ஆவது திருத்தச்சட்டமே அடிப்படையாக அமையவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தியை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க பெறுமானால் அது இலங்கையரின் விருப்பத்திற்கு அமையவே நிகழ வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது கோரியுள்ளார்.

13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற் போன பிள்ளையார் சிலை

(மருதங்கேணி)

மருதங்கேணி வடக்கு கடற்கரைப் பிள்ளையார் கோவில் உடைத்து எழுந்தருளி விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

நேற்றுப் பகல் 1.30 மணிக்குப் பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றிருக்க வேண்டுமென ஆலய நிர்வாகிகளில் ஒருவரான விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (116)

## இந்திய எம்.பிக்கள் குழு நாளை இலங்கை விஜயம்



(புதுடில்லி)

எதிர்க் கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய எம்.பிக்கள் குழுவினர் 6 நாள் பயணமாக நாளைய தினம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுதர்சன நாச்சியப்பன், மாணிக்க தாகூர், எம். கிருஷ்ணசாமி, என்.எஸ்.வி.சித்தன், தி.மு.க.வின் டி.கே.எஸ். இளங்கோவன், பா.ஜவை சேர்ந்த பிரகலாத் ஜோஷி, சி.பி. தாகூர் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த டி.கே.ரங்கராஜன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நாளை வரும் இந்தக் குழுவினர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கவுள்ளனர். இதன்போது ஜனாதிபதி

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஓமானிடமிருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்ய அரசு முயற்சி

(கொழும்பு)

ஈரான் மீதான அமெரிக்காவின் தடையைத் தொடர்ந்து ஓமானிடமிருந்து மசகு எண்ணெயை கொள்வனவு செய்யும் பொருட்டு அந்நாட்டுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது

இதன் முதற்கட்டமாக ஓமானிடமிருந்து மசகு எண்ணெய் [illegible]திரிகளைப் பெற்று அரசாங்[illegible] பரிசோதிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

ஈரான் மீதான தடையைத் தொடர்ந்து மசகு எண்ணெய்க்கான கேள்வி உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருவதுடன், அதன் விலையும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் கொரியா ஆகிய நாடுகள் மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்கான மாற்று வழிகள் குறித்து ஆலோசித்து வருகின்றன.

அதேவேளை, இந்நாடுகளால் இலங்கை போன்ற சிறிய நாடுகள் மசகு எண்ணெயைக் கொள்வனவு செய்வதில் கடும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்நிலையிலேயே ஓமானிடம் இருந்து மசகு எண்ணெயைக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## குணரட்ணம், திமுது கடத்தலா? நிரூபணமில்லை என்கிறது பொலிஸ்

(கொழும்பு)

முன்னணி சோசலிச கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்டமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

கடத்தல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடத்தல் நடத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பஸில் புதுடில்லி விஜயம்

(கொழும்பு)


இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்ததன் மூலம் ஏற்பட்டுள்ள இராஜதந்திர விரிசலை சீர்செய்யும் வகையில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இம்மாத இறுதியில் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இலங்கைக்கான விஜயத்தைத் தொடர்ந்து, இம்மாத இறுதியில் தான் புதுடில்லிக்குச் செல்லவுள்ளதாக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது

(19) ஆம் பக்கம் பார்க்க

## தற்கொலையில் முடிவடைந்த சகோதரிகளின் வாய்த் தர்க்கம்



(யாழ்ப்பாணம்)

சகோதரிகள் இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு தற்கொலையில் முடிவடைந்த சம்பவமொன்று யாழ்ப்பாணம், பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கருகாமையிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளமை தமது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆசிரியர்களான கீதாஞ்சலி சங்கரப்பிள்ளை (வயது - 40), சுவர்ணலதா சங்கரப்பிள்ளை (வயது - 42) என்ற இரு சகோதரிகளே சடலமாக நேற்றுக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கட்சி உறுப்பினர்களுக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல்

### முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கம்பஹா பிரதேசத்திலுள்ள முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் வீடுகளுக்குச் சென்றுள்ள பொலிஸார், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

மேற்படி உறுப்பினர்களின் வீடுகளுக்குச் சென்றுள்ள பொலிஸார்,

(19) ஆம் பக்கம் பார்க்க

# உற்பத்தியாளருக்கு நேரடி சந்தை வாய்ப்பு புத்தாண்டு சந்தையின் நோக்கம் அதுவே!

### சமுர்த்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே திவிநெகும புத்தாண்டுச் சந்தையின் நோக்கம் என்று சமுர்த்தி உதவி ஆணையாளர் சி.சிவசிறி தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற திவிநெகும புத்தாண்டுச் சந்தை நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனை அவர் தெரிவித்தார்.

இன்று சந்தையில் கிடைக்கின்ற பொருட்கள் நுகர்வோரிடம் சென்றடைகின்றது. இதனால் வியாபாரிகள் மட்டுமே அதிக இலாபமடைகின்றார்கள். இதன் மூலம் உற்பத்தியாளர்கள் சிறிய ளவு இலாபத்தையே பெறுகின்றார்கள். இவ்வாறான சந்தைகளை உருவாக்குவதன் மூலம் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைத தாமே நேரடியாக விற்பனை செய்கின்றபோது இதன் மூலம் வருகின்ற இலாபத்தை உற்பத்தியாளர்களே அனுபவிக்க முடிவதுடன் நுகர்வோரும் இதனால் நன்மையடைகின்றனர். இத்தகைய விடயங்களைக் கருத்தில் கொண்டே பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் சமுர்த்தி அதிகார சபையும் நாடு பூராகவும் இததகைய திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் புத்தாண்டுச் சந்தையைச் சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார். இதில் ஈ.பி.டி.பி. பிரமுகர் சுப்பையா, ஈ.பி.டி.பி. கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோர் கெளரவ விருந்தினர்காளக் கலந்துகொண்டனர். (02,நிரு)

# சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுடன் 56 நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பொலிகண்டியைச் சேர்ந்த தேவகுலராஜா (வயது-10) என்ற சிறுவன் நேற்று முன்தினம் மரணமானார். சகோதரியின் கைத்தொலைபேசியை சுடு தண்ணீருக்குள் வீழ்த்திய சம்பவத்தால், சகோதரிக்குப் பயந்து தன்னைத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிக்கொண்ட சம்பவத்திலேயே மேற்படி சிறுவன் காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்தார்.(எஸ்)

# மண்ணெண்ணெய் மானியம் சீரில்லையென விசனம்


(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் மானிய முத்திரைக்கான மன்ணெண்ணெய் விநியோகம் இதுவரை முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நாட்டில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசாங்கம் மண்ணெண்ணெய் மானிய முத்திரைகளை விநியோகம் செய்திருந்தது.

இதன் கீழ் யாழ். மாவட்டத்திலும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. இம் முத்திரைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கான நிதி ஒதுக்கீடு இதுவரையும் யாழ். மாவட்டத்திற்கு வந்துசேராததை அடுத்து விநியோக நடவடிக்கைகள் தாமதமடைகின்றது.

இருந்தும் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருபபில் இருந்த மண்ணெண்ணெய்யை விநியோகிக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்பினரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய விநியோகிக்கப்படுகின்றன. இருந்தும் ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோக நடவடிக்கையை ஆரம்பிக்கவில்லை. இதன் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானியத்தை உரிய காலத்தில் வழங்க அவர்கள் கோரியுள்ளனர். (பா)

# தவறா? ஏமாற்று வித்தையா?




யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உள்ளூர் உற்பத்தித் தயாரிப்பு ஒன்றின் போத்தல் லேபிலில் உற்பத்தி திகதி 13.07.12 என்றும் முடிவுத் திகதி 13.08.12 என்றும் அச்சிடப்பட்டுள்ளது. இது தற்செயலாக இடம்பெற்ற தவறா? திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஏமாற்று வேலையா? என்று அறியாமல் பாவனையாளர்கள் திகைப்படைந்துள்ளனர். (44)



தினமுரசு காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற புத்தாண்டு நிகழ்வின் போது...

## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித் தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1350)

# ஜும்மா பள்ளிவாசல் வீதியில் குவிந்து கிடக்கும் குப்பைகள்

மானிப்பாய் பிரதான வீதியையும் ஒஸ்மானியக் கல்லூரியையும் இணைக்கும் ஜும்மா பள்ளிவாசல் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் இந்த வீதியால் சிரமத்தின் மத்தியிலேயே பயணிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, இந்த வீதியில் காணப்படும் குப்பைகளை ஒருமாத காலத்திற்கு மேலாக யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் அகற்றவில்லை எனவும் இந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டனர். (சி)




# காரைநகர் கருங்காலியில் இரவு வேளையில் கொள்ளை

(காரைநகர்)

காரைநகர் கருங்காலிப் பகுதியில் தாயும் மகளும் வசித்துவந்த வீட்டில் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை வீட்டார் அண்மையில் உள்ள கோயில் சப்பரத் திருவிழாவுக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து இரவு 07.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வீட்டின் பின்பக்கக் கதவினை உடைத்து கணினி, 3 பவுண், கைத்தொலைபேசி என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

தாயும் மகளும் இரவு 11.00 மணியளவில் வந்துபார்த்தபோது கதவு திறபட்டு இருந்ததுடன் மேற்குறிப்பிட்ட பொருட்கள் கானாமற்போனதை அறிந்து உடனே ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு முறையிட்டபோது அவர்கள் உடனடியாக வந்து விசாரணைகளை மேற்கொண்டபோதிலும் பொருட்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. (50)

# நயினாதீவு பெருங்குள வீதி புனரமைக்க நடவடிக்கை

பல ஆண்டு காலமாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் கிடந்த 6 ஆம் வட்டாரம் பெருங்குள வீதி நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச சபையினால் சுமார் 9.8 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்புனரமைப்புக்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டு, ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ந.கருணாகர குருமூர்த்தி தெரிவித்தார். நயினாதீவு தெற்கு வாழ் மக்களின் அன்றாட பயணத்திற்குப் பயன்படும் இவ் வீதிக்கு அருகில் உள்ள பெருங்குளம் மழை காலத்தில் நீர் நிரம்பி பாதைக்கு மேலாக நீர் பாய்வதாலும் பயணிக்க முடியாமல் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ் வீதி முற்றாக புனரமைக்கப்படும் நிலையில் எந்த வித சிரமமும் இன்றி மக்கள் பயணிக்க முடியுமெனவும் பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (85)

உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும் உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்வு இருக்கும்.

- சோக்ரடீஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வறட்டுப் பிடிவாதங்களுக்கு விடைகொடுப்போம்!

பிரபலமான ஒரு குட்டிக்கதை இது. ஒரு நதியில் இரு மரக் குற்றிகள் விழுகின்றன. ஒன்று குறுக்காகவும் மற்றது நேர்கோட்டிலும் மிதக்கின்றன. நேர்கோட்டில் விழுந்த குற்றி நதிக்கு தான் தான் பாதை காட்டுவதாக ஆனந்தத்தில் நதியுடன் இணைந்து பயணித்தது. குறுக்கே விழுந்த குற்றி தான் நதியின் ஓட்டத்தைத் தடைப்படுத்தப் போவதாகக் கடைசி வரை சாகசங்கள் செய்து பார்த்தது. இறுதியில் இரு குற்றிகளுமே பெரும் பள்ளத்தில் போய் விழுந்தன. நதிக்கு இந்தக் குற்றிகள் குறித்து ஒன்றுமே தெரியாது.

இந்தக் கதை நமக்குச் சொல்ல வருவது வாழ்வின் நிஜத்தை. சிலர் வாழ்க்கையை வலிந்து கஷ்டப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் வாழ்வது தவிர வாழ்க்கையில் வேறென்ன பெரிதாகி விடப் போகிறது? இன்றிருக்கும் நமது எதிர்ப்பான, பகையான, வெறுப்பான மனநிலைகளுடனேயே வாழ்ந்துவிட்டுப் போவது ஒரு சிலருக்கு வேண்டுமானால் திருப்தி தருவதாக இருக்கலாம். பெரும்பாலான மக்களுக்கு அதனால் என்ன கிடைத்துவிடப் போகிறது?

பெரும்பாலான மக்களின் துயரைக் கவனத்தில் கொண்டு, அவர்களை வாழச் செய்யும் விதமாக, அவர்களது வாழ்வுக்கு வேண்டியவற்றைப் பெற்றுத்தரும் விதமாக நம்மால் முடிந்ததைச் செய்ய யோசிப்பதே இன்று மனிதருக்கான கடமையாக இருக்க முடியும். உணர்ச்சிகரமான கனவுகளைக் காட்டி அவர்களை மேலும் மேலும் கஷ்டப்படத் தூண்டுவது இன்றைய யதார்த்தமாகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீண்ட காலம் வாழ்வைக் கொடுக்கும் நெல்லிக்கனியைத் தானே உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்து அவரை வாழச் செய்த அதியமான் நெடுமானஞ்சியும், போரையும் பகையையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்த மன்னர்களிடம் போய் விவசாயிகளின் துயரையும் சாதாரண மக்களின் அவதியையும் துணிவோடு எடுத்துச் சொன்ன வெள்ளைக்குடி நாகனார் போன்றவர்களும் இருந்திருக்கிறார்கள்.

“உனது வெண்கொற்றக் குடை வெயிலை மறைப்பதற்கு உள்ளது அல்ல, வருத்தமுறும் குடிமக்களுக்கு ஆதரவு காட்டுவதற்கேயாகும். அவர்களது வாழ்வுப் பாடுகளை உணர்ந்து உன் குடியைக் காப்பாய். அவ்வாறு செய்தால் பகைவரும் உன் காலில் பணிந்து நிற்பர்” என்று சமுதாய உணர்வோடும், எளிய மக்கள்பால் கரிசனையோடும் பாடியுள்ளனர்.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் “உண்டாலம்ம” என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல், பிறர்க்கென வாழும் பேராண்மையாளர்களால்தான் இவ்வுலகம் நிலைபெற்று வாழ்வதாய்ச் சொல்கிறது. இம்மையிலும் மறுமையிலும் பலன்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து அறம் செய்வதல்ல; இலாபத்தை எதிர்பாராது சமூகத்திற்கு உதவுவதே உயர்ந்த குணம் என்பதைச் சொல்கிறார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

நம் வாழ்க்கையையும், அதேசமயம் மற்றவர்களின் வாழ்க்கையையும் நேசிக்கும் மனப்பாங்குதான் நம்மை மனிதர்களாக உயர்த்தும். இந்த வாழ்க்கை நமக்கு முக்கியம். இதை இழந்து விட்டு யார் யாருடையதோ ரோசங்களுக்காக நம்மை வதைகளோடு காத்திருக்கச் சொல்கிறவர்களை நாம் நம்ப வேண்டாம்.

நாம் மனிதர்கள். மனிதர்கள் விரும்புவது என்ன? உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம்... இவற்றோடு நிம்மதியான ஓர் எளிய வாழ்க்கை. எல்லோருக்குமான வாழ்க்கை. யாதும் ஊர். யாவரும் கேளிர். நம்மைச் சுற்றிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தீமைகள் அவலங்கள் எல்லாம் நிலைப்பதிலோ அழிவதிலோ நமக்கும் பங்குண்டு.

நம்மை நாமே வலிந்து அவலப்படுத்திக் கொள்கிற வறட்டுப் பிடிவாதங்களுக்கு விடைகொடுத்தால்தான் மகிழ்ச்சியான விடுதலையுணர்வும், அனைவருக்குமான வாழ்வும் சாத்தியமாகும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

- ஆசிரியர் -

# சமூகச் சீரழிவுகளை தடுக்க வலி.மேற்கில் விசேட திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதியில் கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவின் சில பகுதிகளில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

துணைவி, வட்டுக்கோட்டை தெற்கு, முளாய், பனிப்புலம், கல்வளான் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலங்களில் குற்றச் செயல்களும், சமூகச்சீரழிவுகளும், அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இதற்காக வலி.மேற்கு பிரதேச செயலரினால் விசேட நடவடிக்கைக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழு மேற்படி கிராமத்துக்குள் சென்று கள ஆய்வுகளைச் செய்யவுள்ளது.

இதன் மூலம் எவ்வாறான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று இக்குழுவினர் அடையாளம் கண்டு அதற்குப் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

## பூநகரியில் உணவுக்களஞ்சியம்

(பூநகரி)

யுத்தத்தின் போது முற்றாக அழிவடைந்த பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலைய களஞ்சியத்திற்குப்பதிலாக புதிய களஞ்சியசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

என்றிப் திட்டத்தின் கீழ் சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் இப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு தம்மிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டு பயன்படுத்துவதாக ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் ந.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

இந் நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு சங்கத்தலைவர் த.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது. கடந்த வாரம் நடைபெற்ற இவ் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், பூநகரி பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கூட்டுறவுப பகுதி அலுவலர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர். (112)

## ஹாட்லி முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

20 ஆவது படைப்பிரிவின் வருடாந்த முதலாவது கடேற் கணிப்பீட்டுப் போட்டி கடந்த வாரம் கொழும்பு நகரில் நடைபெற்றது.

இதில் 1 ஆம் இடத்தை யா/ஹாட்லிக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை வசாவிளான் மகா வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை யாழ்.மத்திய கல்லூரியும், 4 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (12)

## போதையில் சாரதிகள் கைதுசெய்ய ஏற்பாடு

(கொழும்பு)

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய மதுபோதையில் வாகனம் செலுத்திய 90 இற்கும் அதிகமான சாரதிகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் வேலைத்திட்டம் கடந்த 9ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுவருவதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் ஒரு வாரகாலத்திற்கு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

## வேகமாக அதிகரிக்கும் டெங்கு நோய்த்தாக்கம்

(கொழும்பு)

டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் நாளுக்கு நாள் வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக இதுவரை 43 பேர் பலியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக 9 ஆயிரத்து 657 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டெங்கு நோய்த் தொற்றுக் காரணமாக மேல்மாகாணமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டெங்குத் தொற்றானது ஜனவரி மாதத்திலே அதிகளவில் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வரட்சியின் பிடியில் தீவகம்

(தீவகம்)

தீவகத்தின் நீர் நிலைகள் பலவும் வேகமாக வற்றி வரண்டு வாடுகின்றன. கோடை வெய்யில் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வரும் நிலையில் தீவகப்பகுதிகளில் கடும் வரட்சி நிலை தோன்றியுள்ளது.

இதனால் இப்பகுதியில் காணப்பட்ட சிறு குளங்கள் யாவும் வற்றி வரண்டு விட்டன. இதனால் இப்பகுதியில் கால்நடைகள் தமது குடிநீர்த் தேவைக்காக அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் வற்றும் நிலையில் உள்ள குளங்களில் உள்ள நன்னீர் மீன்களும் அழிவடையும் சூழல் தோன்றியிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (26)

## வெளிநாட்டு பறவைகள் யாழ். நோக்கி படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் நீர்நிலைகளுக்கு வெளிநாட்டுப் பறவைகள் படையெடுத்து வந்துகொண்டிருக்கின்றன.

இப் பகுதிகளில் காணப்படும் நீர் நிலைகளில் உள்ள மீன்களை தமக்கான உணவாக பொற்றுக் கொள்ளும் நோக்கில் இப் பறவையினங்கள் அதிகளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த வண்ணமுள்ளன.

குறிப்பாக தீவகப்பகுதிகளில் காணப்படும் குளங்கள் வற்றும் நிலையில் இருப்பதால் அங்குள்ள மீன் வகைகளை மேற்படி வெளிநாட்டுப் பறவைகள் தேடிப்பிடித்து தமக்குரிய உணவாக உட்கொள்ளுகின்றன.

அத்துடன் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள நீர் நிலைகளிலும் வழுக்கையாற்றுப் பகுதிகளிலும் கல்லுண்டாய் பகுதியிலும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டுப் பறவையினங்கள் தரையிறங்கி உணவுத் தேடல்களில் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. (26)

## முதியவர்களுக்கு உதவு தொகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வாழும் முதியவர்களுக்கு மாதாந்தம் உதவு தொகையை வழங்க சமூக சேவைத் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் முதற் கட்டமாக ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் வாழும் எழுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விபரங்களை திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு விபரம் திரட்டப்படும் முதியவர்களுக்கு மாதாந்த உதவு தொகையை வழங்க சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வன்னி வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதியில் நான்கு மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாததால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதாக அறிய முடிகின்றது.

இதனடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், பூநகரி, வேரவில், வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளிலும் கண்டாவளை ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையத்திலும் வைத்திய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாதுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பெரிய பண்டிவிரிச்சான், நானாட்டான் பிரதேச வைத்தியசாலைகளிலும், திருக்கேதீஸ்வரம், வெள்ளாங்குளம், மறிச்சுக்கட்டி, இரணை இலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும், வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணிப் பிரதேச வைத்தியசாலையிலும் வைத்திய உத்தியோகத்தர் வெற்றிடம் நிலவுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான, அளம்பில், கொக்கிளாய், நானாட்டான பிரதேச வைத்தியசாலைகளிலும் துணுக்காய், ஐயன்கண்குளம் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் வைத்திய உத்தியோகத்தர் பற்றாக்குறையாகவுள்ளதாக சுகாதார அமைச்சின் உயர்மட்டத் தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

எனவே வன்னிப் பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர் பற்றாக்குறைக்குத் தீர்வினை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)



கடந்த கால அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்த பூநகரி மகா வித்தியாலயக் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்ட நிலையில் புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் 661 ஆம் படைப்பிரிவுத் தளபதி கேணல் பொன்னம் பெருமவும் ஏனைய விருந்தினர்களும் அடிக்கல் நாட்டும் படங்களைக் காணலாம். இக்கட்டடத் தொகுதி மீள்நிர்மாணத்துக்காக 130 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (112)

## பிள்ளைநேயப் பாடசாலை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பிள்ளை நேயப் பாடசாலைச் செயற்றிட்ட இணைப்பாளருக்கான மேற்படி செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

பிள்ளை நேயப் பாடசாலைச் செயற்றிட்டத்திற்கு பாடசாலைகள் தோறும் வினைத்திறன் மிக்க ஆசிரியர் ஒருவரை இணைப்பாளராக அதிபர் நியமித்து, அந்த ஆசிரியரை மேற்படி செயலமர்வுக்கு அனுப்பிவைக்கும்படி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இக்கருத்தரங்கும் செயலமர்வும் உடுவில், தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலை இணைப்பாளர்களுக்கு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணி வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

சங்கானை, சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலை இணைப்பாளர்களுக்கு நாளைமறுதினம் செவ்வாய் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும். இணைப்பாளர்கள் இக்கருத்தரங்கில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஈஸ்ரர் பண்டிகையன்று யாழ. போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செயது விளக்கமறியலில் வைக்கப்பட்ட நபரை கடந்த வியாழக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா பிணையில் செல்ல அனுமதித்தார்.

யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வேளை, சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

♦ ♦ ♦

கோப்பாய் பகுதியில் வீதியோரத்தில் இருந்த கையடக்கத் தொலைபேசியை எடுத்து விற்பனை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நபரைப் பிணையில் செல்ல யாழ்.நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

சந்தேக நபர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மு.றெமிடியஸ் பிணை விண்ணப்பம் கோரியிருந்தார்.

யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா சந்தேக நபரை 3ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்

# வீதி அகலிப்புப் பணிக்காக மின்தடை ஏற்படும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்யவேண்டியிருப்பதாலும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை, 18 ஆம் திகதி புதன்கிழமை, 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடைப்பட்டிருக்கும்.

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19ஆம் திகதி வியாழக்கிழமை, 21ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை கந்தரோடை, மாகியப்பிடடி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இட்ங்களிலும் மின்தடைப்பட்டிருக்கும்.

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளபபிட்டிப் பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, கோம்பயன்மணல் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## பூநகரியில் புதுவருடச் சந்தை

(முழங்காவில்)

புத்தாண்டு தினத்தையொட்டி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பூநகரி கோட்டை மைதானத்தில் கடந்த இரு நாட்களாக விவசாயிகள் விசேட சந்தை விற்பனை இடம்பெற்றது.

11ஆம், 12ஆம் திக்திகளில் நடைபெற்ற இச்சந்தை விற்பனையை பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள், கிராம சேவை அலுவலர்கள், கமநலச்சேவை அலுவலர், பூநகரிப் பிரதேச கமக்கார அமைப்பினர், பூநகரிப் ப.நோ.கூ.சங்கத்தினர் கலந்து கொண்டதோடு, தமது நிறுவன ரீதியான பொருள்களையும் மலிவு விலையில் விற்பனை செய்தனர்.

இச்சந்தையில் பனம் பொருள் உற்பத்திப் பொருள்கள், விவசாய உற்பத்திகள், காய்கறி வகைகள், நெய், தேன் போன்றவையும் விற்பனையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கணிசமான மக்கள் இச்சந்தையில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (112)

## திருநாள் திருப்பலி

(கிளிநொச்சி)

கிளாலி புனித தோமையார் ஆலய வருடாந்த உற்சவமும், திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இன்று மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யுத்த சூனியப் பிரதேச மான கிளாலிப் பிரதேசம் 16 வருடங்களின் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (69)

# வவுனியா வடக்கு வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

(தொடர்ச்சி...)

வவுனியா வடக்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**பிரிவு -IV கதைகூறல்**

ம.சுலக்சன் -கனகராயன்குளம ம.வி, கெ.நிதுசன் - புதுக்குளம் ம.வி, அ.டிலக்சன் - புதிய சின்னக்குளம் அ.தக.பாடசாலை.

**பிரிவு -II பேச்சு**

த.கஜேந்தினி - தவசியாகுளம் அ.த.க.பாடசாலை, க.லக்சன் - சுந்தரபுரம் சரஸ்வதிவித்தி, வா.ஷயிதா - கனகராயன்குளம் ம.வி.

**பிரிவு -III பேச்சு**

பி.தரன்சிகா - கனகராயன்குளம் ம.வி, தெ.சரண்யா - நெடுங்கேணி ம.வி, ர.சாயிபிரியங்கா - கல்மடு ம.வி.

**பிரிவு -IV பேச்சு**

இ.கிறிஸ்ரனா -தரணிக்குளம் கணேஸ் வித்தி, ச.அலெக்சாண்டர் - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, தே.உமேசன் - புதுக்குளம் ம.வி.

**பிரிவு -V பேச்சு**

ம.செல்வராணி - நெடுங்கேணி ம.வி, த.தர்சிகா - புளியங்குளம் இந்துக் கல்லூரி, தே.அனோஜன் - கனகராயன்குளம் ம.வி.

**பிரிவு -I பாவோதல்**

உ.ஷானிகா - புதுக்குளம் ம.வி, ந.மதுசா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, அ.அகஸ்ரினா - தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**பிரிவு -II பாவோதல்**

ச.பிரதீபா - தரணிக்குளம் கணேஸ் வித்தி, சு.பத்மலோஜினி - புளியங்குளம் இந்துக் கல்லூரி, த.அஜித்தா - புதுக்குளம் ம.வி.

**பிரிவு -III பாவோதல்**

தெ.மிதிலைமாறன் - புதுக்குளம் ம.வி, ச.சரோஜினி - கிடாச்சூரி அ.த.க.பாடசாலை, ச.பத்மபிரியா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி.

**பிரிவு -IV பாவோதல்**

பு.சாமினி - கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, ச.ஜெயச்சந்திரன் - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, கு.புஸ்பலதா - தரணிக்குளம் கணேஸ் வித்தி.

**பிரிவு -V பாவோதல்**

ந.அம்பிகா - கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தி, ம.தீபனா - சின்னடம்பன் பாரதி வித்தி, தி.றஜனேஸ்வரி கல்மடு ம.வி.

(தொடரும்...)

## பூநகரி கடற்றொழிலாளர்களுக்கு மானிய எரிபொருள் விநியோகம்

(முழங்காவில்)

பூநகரி கடற்றொழில்ாளர் கூட்டுறவுச் சங்க சமாச எல்லைக்குட்பட்ட 14 கூட்டுறவுச் சங்க கிளைத் தொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையிலான இலவச மண்ணெண்ணெய் விநியோகம் நடை பெற்றுவருகிறது.

முதலாம் கட்டமாக 200 உறுப்பினர்களுக்கும் 2 ஆம் கட்டமாக 250 பேருக்கும் மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் இ.இரவீந்திரன் தலைமையிலான குழுவினர் நேரடியாகவே இப்பகுதிக் கிராமங்களுக்கு நேரில் சென்று இம்மானிய முத்திரைகளை வழங்கி வருவதாகவும், இம்முத்திரைகளுக்குரிய மண்ணெண்ணெய் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தின் நாச்சிக்குடா எரிபொருள் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (112)

# நம்பிக்கையான சமூக உணர்வை மக்கள் மத்தியில் வளர்க்க வேண்டும்

## ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல்



(கோண்டாவில்)

எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு நம்பிக்கையான சமூக உணர்வை எம் மத்தியில் வளர்ப்பதன் ஊடாக அதை நடைமுறைப்படுத்த முடியுமென ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

கோண்டாவில் கிழக்கு சிறி நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை ஆகியன மாதர் சங்கம இணைந்து நடாத்தும் 60ஆவது ஆண்டு (வைரவிழா) நிறைவு விழாவும் இல்லமெய் வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: பல சாவல்களை எதிர்கொண்டு இன்றைய நிலையில் தனக்கென ஓர் தனித்துவத்தை கொண்டிருக்கும் கோண்டாவில் சிறிநாராயண சனசமூக நிலைய வாழ் மக்களது எதிர்காலத்தில் நம்பிக்கையான சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

நாம் பல அனுபவங்களை சுமந்து வாழ்பவர்கள். விடா முயற்சி, தன்நம்பிக்கை என எம் மக்கள் மனதில் வாழ்ந்ததன் படியால்தான் இன்று நாம் சுதந்திரமாக நடமாடக் கூடிய சூழ்நிலை கிடைத்திருப்பது எம் எதிர்கால சந்ததியினருக்கு எம்மால் பெற்று கொடுத்த நம்பிக்கையாகும். இதனோடு நின்று விடாது எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் பூரண வாழ்வுரிமையைப் பெற்று எம் தேசத்தில் சுதந்திரமாக வாழ்வதற்காகவே எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அயராது பாடுபட்டு வருகின்றார் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ச.சுபாஸ்சந்திரன், ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச இணைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாசன் மற்றும் கழக அங்கத்தவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சியில் வீதி அபிவிருத்திப் பணிக்குத் தேவையான கற்கள் கிளிநொச்சி டிப்போ சந்திப்பகுதியில் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளது.

இவை பைக்கோ மூலம் டிப்பர் வாகனங்களில் ஏற்றப்பட்டு வீதி அபிவிருத்தி நடைபெறும் இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. படம்- ஜெ.கலையகன்

# 2 கிலோ மீற்றர் தூரம் இருவழிப் பாதை அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ - 9 வீதியின் 2 கிலோ மீற்றர் வீதி இரு வழிப்பாதையாக புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த இவ்வீதிகளே தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நகரத்திட்டமிடலுக்கு ஏற்ற வகையில் இரு வழிப்பாதையாக இவ்வீதி புனரமைக்கப் பட்டுவருவதால் போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (கே)

# 40 ஆவது ஆண்டு விழா ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 40 ஆவது ஆண்டு விழாவை அடுத்த மாத முற்பகுதியில் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மேற்கொண்டு வருகிறது.

மேற்படி விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட விருப்பதாகவும், அம்மலரில் சங்கங்களின் வரலாறு, பனை வளம் தொடர்பான மற்றும் கல்வியியலாளர்களின் கட்டுரைகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உவர் நீர் உட்புகுவதை தடுக்க தடுப்பணைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுப்பகுதியில் கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும் முகமாக உவர் நீர்த் தடுப்பணை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்.குடாநாட்டின் மேற்கு மற்றும் தெற்குப்பகுதிகளின் கரையோரங்களில் ஏற்கனவே காணப்பட்ட உவர் நீர் தடுப்பணைகள் பராமரிப்பு இன்றியும், இராணுவ நடவடிக்கையின் போதும் மிக மோசமாகச் சேதம் அடைந்த நிலையிலுள்ளது.

இதனால் இவற்றைப் புனரமைத்து உவர் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக பொன்னாலை முதல் அராலி வரையான தடுப்பணைகளை புனரமைப்புச் செய்யும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

# வட இந்து மகளிர் கல்லூரியில் 2013இல் ஆரம்பப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

வடஇந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு 2013 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கும் என்று வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடமராட்சியின் கல்விச் செயற்பாடு தொடர்பாக தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் வடமராட்சிப் பிரதேச மாணவர்கள் 54.3 வீதம் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் 15 மாணவர்கள் 9 பாடத்திலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இதன்மூலம் வடமராட்சி மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடையவில்லை.

உடுப்பிட்டி - கொற்றாவத்தை அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 6 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் 2 மாடிக்கட்டடம் ஒன்று அமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வகுப்பறை, மண்டபம், ஹாட்லிக் கல்லூரியின் மண்டபம், பருத்தித்துறை சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம் மற்றும் வடமராட்சி வலயத்தில் அமைக்கப்பட்டு வரும் செயலகக் கட்டடம் ஆகியன நிறைவேறும் நிலையில் உள்ளது. விரைவில் இவை கல்விச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வழிபாடு

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டையொட்டி விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இந்த ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆலய பரிபாலன சபையின் செயலாளர் மு.வரதராசா இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஆயுர் வேத வைத்தியசாலைக்கு மருத்துவர்கள் இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப்பிரதேசத்தில் 3 ஆயுர்வேத வைத்தியசாலைகள் உள்ள போதிலும் இதில் வைத்தியர்கள் நியமிக்கப்படாமையால் பொதுமக்கள் சிகிச்சை பெற முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் பூநகரி, முழங்காவில், ஜெயபுரம் ஆகிய பிரதேசங்களில் தலா ஒவ்வொரு ஆயுர் வேத வைத்தியசாலைகள் அமைந்துள்ளது.

இதில் பூநகரி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஓய்வு பெற்ற வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் முழங்காவில், ஜெயபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகள் யுத்த நடவடிக்கைக்கு பின்னர் இதுவரை இயங்காது காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் குறிப்பாக முழங்காவில் பகுதியில் ஆங்கில வைத்தியசாலை காணப்படும் நிலையில் ஆயுர்வேத வைத்தியத்தை விரும்பும் மக்கள் இவ் வைத்திய தேவையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பிரதேசத்தில் உள்ள மக்களின் வைத்திய தேவையை கருத்திற் கொண்டு இவ் ஆயுர்வேத வைத்தியசாலைகளை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# முரசின் இன்றைய பலன்

(15.04.2012 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 03 ஆம் திகதி. நவமி முற்பகல் 8.30 வரை.
நட்சத்திரம் திருவோணம். அமிர்தயோகம் பிற்பகல் 3.20 வரை.
இராகுகாலம் 4.34 - 6.04 வரை. சுபநேரம் 9.04 - 10.34 வரை.
எமகண்டம் 12.04 - 1.34 வரை. குளிகைகாலம் 3.04 - 4.34 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சௌக்கியம், முயற்சிகளுக்குத்தடை, வீண் பிரச்சினைகள், பொன் பொருள் சேரும். |
| ரிஷபம் | ஆன்மீக ஈடுபாடு, துன்பம் துயரம் நீங்கும், ஆடம்பரப்பொருள் சேரும், காரியானுகூலம். |
| மிதுனம் | செலவு அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை, சாதனை புரிவர், முன்னெச்சரிக்கை. |
| கடகம் | இலாபதினம், கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை, முயற்சிகள்பலிதம், அந்நியரால்கஷ்டம். |
| சிம்மம் | எதிர்ப்புகள், தொழில் வகையால் பணவரவு, ஸ்திரிகளால் தொல்லை, அவதூறு ஏற்படும். |
| கன்னி | நல்ல வாய்ப்பு, பயண அலைச்சல், சுறு சுறுப்புக் குன்றும், நம்பியவர்கள் துரோகமிழைப்பார். |
| துலாம் | நற்கீர்த்தி, ஆஞ்சநேயர் வழிபாடு நன்று, உஷ்ண சம்பந்தமான நோய், மருத்துவச்செலவு. |
| விருச்சிகம் | வாகன சுகம், எதிர்பாராத இடமாற்றம், பொறுப்புக்கள் அதிகரிக்கும், அமைதிக்குறைவு. |
| தனுசு | காரிய மேன்மை, கடல் கடந்த பிரயாணம், உடல் ஆரோக்கியம் நன்று, குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | உடல் நலக்குறைவு, அனாவசிய செலவுகள், பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்ப ஒற்றுமை. |
| கும்பம் | முற்பகல் நன்று, பழைய கடன்கள் தீரும், வழக்குகள்முடிவுக்கு வரும், போட்டிகள் குறையும். |
| மீனம் | மனச் சோர்வு, உடல் ஆரோக்கியம் பாதிக்கும், நண்பர்களால் உதவி. |

# தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை மேற்கு நாடுகள் இடை நிறுத்தியுள்ளன




அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை, ஐரோப்பிய நாடுகள் ஒரு வருட காலத்துக்கு இடை நிறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து இந்த முடிவைகளை மேற்குலக நாடுகள் எடுத்துள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் 2013 மார்ச் மாதத்தில் சபையில் முன்வைக்கப்பட உள்ள அறிக்கையைத் தொடர்ந்தே, இந்த விடயம் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுப்பது என்றும் அவை தீர்மானித்துள்ளன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதை மேற்குலக நாடுகள் குறைத்துக் கொண்டன அல்லது நிறுத்தி விட்டன. மோதல்கள் முடிவுக்கு வந்தால் வாழ்வதற்கு, குறிப்பாகத் தமிழர்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பான நாடு என்ற முடிவுக்கு மேற்கு அரசுகள் பலவும் வந்திருந்தன.

அதனடிப்படையில் ஏற்கனவே அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பலரையும் அவை திருப்பி அனுப்ப ஆரம்பித்திருந்தன. பிரிட்டன் நாடு இந்த விடயத்தில் தீவிரமாகச் செயற்பட்டு நூற்றுக்கணக்கான வரகளைத் திருப்பி அனுப்பியது.

இதேபோன்று சுவிஸ் அரசும பலரைத் திருப்பி அனுப்பியதுடன், மேலும் பல நூற்றுக் கணக்கானவர்களைத் திருப்பி அனுப்பவும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்த போதும் மேற்குலக அரசுகள் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பி அனுப்புவதில் குறியாக இருந்தன.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ஒரு வருட காலத்துக்கு ஒத்தி வைக்க சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளது எனறு அரசியல் விவகாரப் பிரிவின அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுவிஸ் அரசின் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஐரோப்பாவின் வேறு பல அரசுகளும் தீர்மானித்துள்ளன என்று தெரிகிறது. எனவே, அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டம் ஒரு வருட காலத்துக்கு செயற்படுத்தப்படாது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கை அடுத்த ஆண்டு முன்வைக்கப்பட்டதன் பின்னரே இது தொடர்பில், தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருவின் அமைப்பாளர் பதவி கைமாறுகிறது சட்டத்தரணிக்கு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரியவின் தொகுதி அமைப்பாளர் பதவி, சட்டத்தரணி ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மஹர தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியை கரு ஜயசூரிய ஏற்றுக்கொள்ள முன் வராத காரணத்தால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மஹர தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவிக்காக கரு ஜயசூரியவை, கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பரிந்துரைத்திருந்தார். எனினும், கரு ஜயசூரிய இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன காரணமாக மஹர, கட்டான ஆகிய தேர்தல் தொகுதிகளுக்கு புதிய அமைப்பாளர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடட்ான தொகுதிக்கு, முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாணடோ புள்ளேவின் உறவினர் ஒருவரை நியமிக்க ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தற்போது இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதுடன் புதிய தொகுதி அமைப்பாளர்கள் பற்றிய தகவல் வெளியிடப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கை வங்கிக் கிளையால் விவசாயிகளுக்கு கடன் திட்டம்

(கொழும்பு)

இலங்கை வங்கி பருத்தித் துறை கிளையினரால் விவசாயிகளுக்கான காலபோக பயிர்ச் செய்கைக்கான கடன் திட்டம் வழங்கப்படவுள்ளது.

2012 ஆம் ஆண்டு காலபோகத்திற்காக சிறுபோக பயிர்ச் செய்கையின் வெங்காயப் பயிர்ச் செய்கைக்காக ஒரு ஏக்கருக்கு 95 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு ஏக்கருக்கு வழங்கப்படுவதுடன் மரக்கறிக்கு 1 பரப்புக்கு 90 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு பரப்புக்கு எட்டுவீத வட்டியுடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடன் திட்டமானது மத்திய வங்கியின் வட்டிக் குறைப்பின் மூலம் சிறுபோக விவசாயிகளுக்காக 270 நாள் தவணையாக கடன் வழங்கப்படுகின்றது எனவும் அத்துடன் விவசாயிகளின் நன்மை கருதியும் ஊக்குவிக்கும் முகமாகவும் இக்கடன் திட்டம் வழங்கப்படுகின்றது.

எனவே விவசாயிகள் தத் தமது தேவை கருதி விண்ணப்ப் படிவத்தை நிரப்பி இக் கடன் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் தர்மராஜா அறிவித்துள்ளார். (116)

# நாட்டின் இறைமையைப் பாதுகாக்க படையினர் ஒத்துழைக்க வேண்டும்

(கொழும்பு)

நாட்டின் இறைமையைப் பாதுகாக்க படையினர் தொடர்ச்சியாக ஒத்துழைக்க வேண்டுமென இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் நன்மதிப்பை சீர்குலைக்கும் முனைப்புக்களில் பல்வேறு தரப்பினர் முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச சமூகத்தினால் நட்டின இறைமைக்கு விடுக்கப்பட்டு வரும் சவால்களை முறியடிப்பதற்கு படையினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானத்துடன் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அடுத்த சவால் எனவும் அதற்கும் படையினர் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தினர் இலங்கைக்கு எதிராக மேற்கொண்ட பல சதி முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

# இந்திய நாடாளுமன்றக் குழு கொழும்பு வருவது நிச்சயம்

## வெளிவிவகார அமைச்சு உறுதி செய்கின்றது

இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் இலங்கைக்கான விஜயம் திட்டமிட்டபடி 16 ஆம் திகதி இடம்பெறும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கையில், இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் வருகையானது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நல்லெண்ண விஜயம் எனவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விஜயத்தில் இருந்து விலகிக் கொண்டாலும், அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் இலங்கைக்கான வருகையானது திட்டமிட்டபடி இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளது. அத்துடன் இக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சநதிப்பதுடன், போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியைச் சென்று பார்வையிடவுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்திய நாடாளுமன்றக் குழுவின் பயணம் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கமைய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டறிவதற்கு முக்கியவத்துவம் கொடுக்கப்படவில்லை என்றும் தமிழநாடு முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மீது கதிர் இயக்க தாக்கம் அறிந்து கொள்ள எச்சரிக்கை மையங்கள்

(கொழும்பு)

கதிரியக்க தாக்கங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கான முன்னெச்சரிக்கை கட்டமைப்பொன்றை ஸ்தாபிக்க அணுசக்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

விசேடமாக இந்திய - கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் விபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் அதன்மூலம் நாட்டிற்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கென இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கதிரியக்கத் தாக்கங்களை அறிந்து கொள்ளக்கூடிய ஐந்து முன்னெச்சரிக்கை கட்டமைப்புக்களை சர்வதேச அணுசக்தி நிறுவனம் இலங்கைக்கு வழங்குவதாகவும் அவர் கூறினார்.

இந்த கட்டமைப்புக்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான மேற்கு பகுதியிலுள்ள கடற்படை முகாம்களில் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் இது கொழும்பிலிருந்தே செயற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கதிரியக்க தாக்கங்களிலிருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பாக பாதுகாப்பு தரப்பினர் மற்றும் பொதுமக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டமொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## பிரபல கொள்ளைக்காரன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வீட்டை உடைத்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கலா வத்த பிரதேசத்தில் வைதது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சந்தேக நபர் 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்ததாக பொலிஸார் தெரிவிதத னர்.

கலாவத்த நகர், காக்கபள்ளி, முன்னேஸ்வரம், மையக்குளம் ஆகிய பிரதேசங்களில் இந்நபர் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

# கிழக்கு முதலமைச்சர் பதவி எமது கட்சிக்கே வேண்டும்

## அடம்பிடிக்கிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கிளிநொச்சி)

கிழக்கு மாகாணத்திற்கான முதலமைச்சர் பதவியை அரசு எமது கட்சிக்கே தர வேண்டிய வரலாற்றுக்கடனாகும் என கிழகது மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட முக்கியஸ்தருமான எம்.எஸ்.எம்.சுபைர் தெரிவித்தார்.

கடந்தவாரம் ஏறாவூர் மீராகேணி கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் இடம்பெற்ற தையல் பயிற்சிப் பட்டறை அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை விரைவில் கலைக்கப்படும் எனும் ஊகங்கள் தற்போது ஊடகங்களில் வெளியாகின்றன. எது எவ்வாறிருப்பினும் 05 வருடங்கள் பூர்த்தியாகாமலும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அதேபோன்று முதலமைச்சரின் அனுமதியின்றியும் மாகாண சபையை கலைக்க முடியாது.

ஊழல்கள் இடம்பெற்றால் மாத்திரம் ஆளுநரால் மாகாண சபையை கலைக்க முடியும். இது இவ்வாறிருக்க மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு மேலும் ஒரு வருடம் உள்ளது. மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெறுவதன்



மூலம் மூவின மக்களின் விருப்பத்திற்குரிய ஜனநாயகப் பண்புகளைக் கொண்ட கடந்த கால அரசியல் வாழ்க்கையில அபிவிருத்திப் பாதையில் எண்ணிலடங்காத சேவைகளையாற்றிய ஒரு அரசியல்வாதியே தேர்வு செய்யப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர்.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அரசாங்கம் எமது கட்சிக்கு தரவிருக்கின்ற வரலாற்றுக்கடன் இம்முறை எமது கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன். இம்முறை அரசாங்கம் எமது கட்சிக்கு தரவிருக்கின்ற வரலாற்றுக்கடனை பெற்றுத்தருகின்ற முழுப்பொறுப்பும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கு உள்ளது என சுபைர் தெரிவித்தார்.


# பூகம்பம் எரிமலை சுனாமி ஏன்?

- என்.ராமதுரை

**ஓடும்** ரயில் வண்டியில் ஒரு காட்சி. உட்கார்ந்த நிலையில் உறங்கும் வெள்ளைச் சட்டைக்காரர் தமக்கு அருகே அமர்ந்தபடி உறங்கும் பெரிய மீசைக்காரர் மீது தம்மையும் அறியாமல் மெல்லச் சாய்கிறார். மேலும் மேலும் சாய ஆரம்பிக்கிறார். ஒரு கட்டத்தில் எடையைத் தாங்க முடியாமல் மீசைக்காரர் உடலை உலுக்கியபடி விழித்துக் கொள்கிறார். வெள்ளைச் சட்டைக்காரரும் விழித்துக் கொண்டு சுதாகரித்துக் கொள்கிறார்.

பூகம்பம் கிட்டத்தட்ட இப்படித் தான் ஏற்படுகிறது. ஒரு சில்லு அடுத்த சில்லை மேலும் மேலும் நெருக்குகிறது. அடுத்த சில்லு ஒரு கட்டம் வரை இதைத் தாங்கிக் கொண்டே இருக்கிறது. நெருக்குதல் ஒரு கட்டத்தை எட்டும் போது சில்லுக்கு அடியில் உள்ள பாறைப் பாளம் பெரிய உலுக்கலுடன் நகருகிறது. அதுவே பூகம்பம்.

இந்திய துணைக் கண்ட சில்லு




ஆண்டுக்கு 5 செண்ரி மீற்றர் விகிதம் வட கிழக்கு திசையில் நகருகிறது. யுரேசிய சில்லு மிக மெதுவாக வடக்கு நோக்கி நகருக்கிறது.எனவே இந்தியச் சில்லு யுரேசிய சில்லை மேலும் மேலும் நெருக்குகிறது. இதன் விளைவாகவே பாகிஸ்தானின் வட பகுதியில் தொடங்கி அஸ்ஸாம் வரையில் இமயமலை அடிவாரத்தில் உள்ள பகுதிகளில் அடிக்கடி பூகம்பம் நிகழ்கிறது. துருக்கியிலும் இவ்விதம் நிகழ்கிறது. ஆகவே துருக்கி நாட்டில் பூகம்பம் அதிகம்.

சில்லுகள் உரசும் இடங்களிலும் பூகம்பம் நிச்சயம். அமெரிக்காவில் கலிபோர்னியா பகுதியில் இரண்டு சில்லுகள் எதிரும் புதிருமாக உரசிச் செல்கின்றன. ஆகவே அங்கு பூகம்பங்கள் நிகழ்கின்றன.

ஒரு சில்லு மற்றொரு சில்லுக்கு அடியில் புதையும் இடங்களிலும் பூகம்பங்கள் ஏற்படுகின்றன. இந்தோனேசியாவுக்கு அருகே கடலுக்கு அடியிலும், ஜப்பானுக்கு கிழக்கே கடலுக்கு அடியிலும் இவ்விதம் சில்லுகள் புதைகின்றன. நியூசிலாந்திலும் இதே காரணத்தால் பூகம்பங்கள் ஏற்படுகின்றன.

சில்லுகளின் விளிம்புகள் புதையுண்டு போகும் போது பிரம்மாண்டமான பாறைப் பாளங்கள் அரைபட்டு பூமிக்குள் செல்கின்றன. பாறைப் பாளங்கள் இப்படி அரைபடும் போது அவை பயங்கரமாகச் சூடேறி நெருப்புக் குழம்பாக மாறுகின்றன. இந்த நெருப்புக் குழம்புதான் எரிமலை வாய் வழியே வெளியே வருகிறது.

பூமியில் மிக ஆழத்தில் நெருப்புக்குழம்பு உள்ளது. ஆனால் எரிமலைகள் வழியே வெளி வருவது பூமியில் ஆழத்தில் உள்ள குழம்பு அல்ல. சில்லுகள் அரைபடும் போது தோன்றும் நெருப்புக் குழம்புதான் எரிமலைகள் வழியே வெளிப்படுகிறது. ஆகவே சில்லுகள் புதையுண்டு போகும் இடங்களில் எரிமலைகள் உண்டு.

சில்லுப் பெயர்ச்சி விஷயத்தில்மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடு இந்தோனேசியா என்று சொல்லலாம். இந்த நாட்டில் பூகம்பம், எரிமலை, சுனாமி ஆகிய மூன்றுமே உண்டு. இந்தோனேசியாவின் தென் பகுதியில் அவுஸ்ரேலிய சில்லு யுரேசிய சில்லுக்கு அடியில் புதைகிறது. இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில்




பசிபிக் சில்லு இதே போல யுரேசிய சில்லுக்கு அடியில் புதைகிறது. 17,600 தீவுகளைக் கொண்ட இந்தோனேசியாவில் 150 எரிமலைகள் உள்ளதில் வியப்பில்லை. ஜப்பானுக்கு கிழக்கே உள்ள கடல் பகுதியிலும் இதே நிலைமைதான். ஆகவே ஜப்பானிலும் பூகம்பம், எரிமலை, சுனாமி ஆகிய மூன்றும் உள்ளன.

ஜப்பானில் மட்டுமன்றி அலாஸ்கா, வட அமெரிக்காவின் மேற்குக் கரை, தென் அமெரிக்காவின் மேற்குக் கரை, நியூசிலாந்து ஆகிய வற்றில் எரிமலைகள் உள்ளன. வேறு விதமாகச் சொல்வதானால் பசிபிக் கடலைச் சுற்றி உள்ள நிலப் பகுதிகளில் எரிமலைகள் உள்ளன. இதை நெருப்பு வளையம் (Ring of Fire) என்று சொல்வதுண்டு.

நிலப் பகுதியில் மட்டுமன்றி கடலுக்கு அடியிலும் பூகம்பங்கள் உண்டு. இந்த கடலடி பூகம்பங்கள் தான் சுனாமியைத் தோற்றுவிக்கின்றன. 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் தாக்கிய சுனாமி இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் அருகே கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஏற்பட்டதே.

பூகம்பத்திலிருந்து மனிதன் ஓடி ஒளிய வாய்ப்பில்லை. ஆனால் கடும் பூகம்பத்தையும் தாங்குகின்ற கட்டடங்களைக் கட்டுவதற்கான தொழில் நுட்பத்தை மனிதன் உருவாகியிருக்கிறான. ஆகவேஉயிர்ச் சேதம் பொருட்சேதத்தைப் பெரிதும் குறைத்துக் கொள்ள இயலும்.

பூகம்பத்தை முன்கூட்டி திட்டவட்டமாக அறிய இதுவரை வழி கண்டு பிடிக்கப்படவில்லை. குறிப்பிட்ட பிராந்தியத்தில் தோராயமாக சில ஆண்டுகளில் பூகம்பம் ஏற்படலாம் என்று இப்போது அறிய முடிகிறது. எதிர் பார்க்கப்படுகின்ற அந்த பூகம்பம் சில ஆண்டுகளில் நிகழலாம் அல்லது 40 அல்லது 50 ஆண்டுகள் கழித்தும் ஏற்படலாம். இப்போதுள்ள தொழில்நுட்பத்தைக் கொண்டு என்றைக்கு, எப்போது, எந்த அளவுக்குக் கடுமையான பூகம்பம் தோன்றும் என்று அறிவதற்கு வாய்ப்பே இல்லை.

எரிமலை எப்போது நெருப்பைக் கக்கும் என்பதும் தெரியாது. ஆனால் எரிமலைச் சரிவுகளில் உணர் கருவிகளைப் பதித்து உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள். எரிமலைகள் அனைத்தும் தொடர்ந்து நெருப்பைக் கக்கிக் கொண்டிருப்பதில்லை. (இத்தாலியில் உள்ள ஸ்ட்ராம்போலி எரிமலை இதற்கு விதி விலக்கு). எரிமலைகள் நீண்ட காலம் ஓய்ந்திருக்கும். பின்னர் உறுமல்களுடன் நெருப்பைக் கக்க ஆரம்பிக்கலாம். அப்படி நெருப்பைக் கக்கினாலும் அந்த நெருப்புக் குழம்பு மனிதன் நடக்கின்ற வேகத்தில் தான் வழிந்தோடும். தப்பி ஓட அவகாசம் உண்டு. மிக அபூர்வமாக எரிமலைகள் மிக பயங்கரமாக வெடித்து பெரும் உயிர்ச் சேதத்தை உண்டாக்கும்.

சுனாமிக்களைப் பொறுத்தவரையில் ஒரு விசித்திர நிலைமை உள்ளது. சுனாமி தாக்கலாம் என்று கண்டறிந்து கூற முடியும். கடலில் இதற்கான கருவிகளை நிறுவுகின்றனர். சுனாமிக்குக் காரணமான கடலடி பூகம்பம் ஏற்பட்டால் அந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் உள்ளவர்கள் எளிதில் உயிர்தப்ப இயலும்.

ஆனால் கடலடி பூகம்பம் நிகழும் இடத்துக்கு மிக அருகில் வாழ்பவர்களைப் பொறுத்த வரையில் எச்சரிக்கை விடப்பட்ட சில நிமிஷங்களில் சுனாமி அலைகள் வந்து தாக்கும் நிலை உள்ளது. மக்கள் தப்பிச் செல்வதற்கு போதுமான அவகாசம் கிடைக்காமல் போய் விடுகிறது. 2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது இந்தோனேசியாவில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததற்கு இதுவே முக்கிய காரணம்.

சில்லுப் பெயர்ச்சியின் விளைவாக ஏற்படும் பூகம்பங்கள், எரிமலைகள், சுனாமிக்கள் ஆகியவை பூமியில் மனிதனை அடியோடு அழித்து விடுமோ என்று அஞ்சத் தேவையில்லை. அப்படி நடப்பதாக இருந்தால் மனித இனம் என்றோ அழிந்து போயிருக்க வேண்டும். காலம் காலமாக பூகம்பங்கள் நிகழ்ந்து வருகின்றன. எரிமலைகளில் ஏதோ ஒன்று தான் எப்போதாவது பெரிய அளவில் பொங்கி நாசத்தை உண்டாக்குகிறது. 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்டது போன்ற சுனாமிக்கள் மிக அபூர்வமாகவே நிகழ்கின்றன.



கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி அளவிலும் பின்னர் 4 மணி அளவிலும் நில நடுக்கம் ஏற்பட்ட போது மக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர்.மாடிக் கட்டடங்களில் பணி புரிந்து வந்த ஊழியர்கள் கீழே ஓடி வந்த பின்னர் திரும்ப மேலே செல்லத் தயங்கினர்.

இந்த பூகம்பம் சுமத்ரா தீவின் மேற்குப் பகுதியில் கடலுக்கு அடியில் நிகழ்ந்தது. ரிக்டர் அளவில் 8.6 புள்ளி இருந்தது. அதாவது அது கடும் பூகம்பம். பூகம்பத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி அலைகள் இங்கும் எட்டியதால்தான் நில நடுக்கம் உணரப்பட்டது.

உலகின் பல்வேறு பகுதிகளில் தினமும் நில நடுக்கம் ஏற்பட்டு வருகிறது. அமெரிக்காவின் கலிபோர்னியா பகுதி, ஜப்பான், நியூசிலாந்து போன்ற பகுதிகளில் நில நடுக்கங்கள் மிக சகஜம். பல நில அதிர்வுகள் ஓரிரு வினாடிகளே நீடிக்கும். பழகிப் போன காரணத்தால் மக்கள் அலட்டிக் கொள்ளாமல் தங்களது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பர். ஆனால் ரிக்டர் அளவில் 8 என்பதான பூகம்பம் சராசரியாக ஓராண்டில் ஒரு முறை தான் நிகழ்வதாகும்.

புதன்கிழமையன்று சுமத்ரா தீவுக்கு மேற்கே இரண்டு தடவை ரிக்டர் 8.6 அளவுக்கு பூகம்பம் ஏற்பட்ட போது அது சுமார் 2700 கிலோ மீட்டர் தொலைவிலும் உணரப்பட்டது.

இந்த ரிக்டர் அளவில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ரிக்டர் 5 என்பதற்கும் 6 என்பதற்கும் வித்தியாசம் எண்ணிக்கை அளவில் ஒன்று தான் வித்தியாசம் ஆனால் ரிக்டர் 6 அள்விலான பூகம்பம் ரிக்டர் 5 அளவிலான பூகம்பத்தை விட 10 மடங்கு கடுமையானது.

ரிக்டர் 4 எனப்படும் பூகம்பத்தை விட ரிக்டர் 8அளவிலான பூகம்பம் பத்தாயிரம் மடங்கு கடுமையானது. அந்த வகையில் பார்க்கும் போது 2004 டிசம்பரில் ஏற்பட்ட கடலடி பூகம்பம் (ரிக்டர் அளவில் 9.3) இப்போதைய பூகம்பத்தை விட சுமார் 10 மடங்கு கடுமையானதே.

இப்போதைய கடலடி பூகம்பத்தைத் தொடர்ந்து ஒரு வேளை சுனாமி தாக்குதல் ஏற்படலாமோ என்ற அச்சத்தில் கரையோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. கடலடி பூகம்பம் ஏற்படும் போதெல்லாம் சுனாமி தாக்குதல் ஏற்பட்டாக வேண்டும் என்ற அவசியமில்லை. தவிர, இப்போதைய பூகம்பமானது கடல் தரைக்கு அடியில் பிரம்மாண்ட பாளங்கள் ஒன்றோடு ஒன்று உரசியதால் ஏற்பட்டதே என்று உலக அளவில் பூகம்பங்களைக் கண்காணித்து வருகின்ற அமெரிக்க அமைப்பு கூறியுள்ளது.

# சென்றலைட்ஸ், பமிலியன்ஸ் சம்பியன்





(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திய மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். சென்றலைட்ஸ் அணியும், பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் அணியும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டிகள் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். சென்றலைட்ஸ் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 74 - 58 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் சி.சி.சி. அணியும், காங்கேசன்துறை ஐக்கிய அணியும் மோதின. மிக பரப்பரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி ரசிகர்களை மகிழ்வூட்டினர். இறுதியில் 46-45 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் சி.சி.சி. அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். பமிலியன்ஸ் அணியும், காங்கேசன்துறை ஐக்கிய அணியும் மோதின.

விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். பமிலியன்ஸ் அணி 29-17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் சி.சி.சி. அணியும் மருதனார்மடம் இராமநாதன் அணியும் மோதின. இதில் இராமநாதன் அணி 45-36 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் அண்ணாத்துறை, யாழ். மத்திய கல்லூரி அதிபர் உட்பட பலர் இப்போட்டி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(20,93)

# மாவட்ட மட்ட கால்பந்து

## 2ஆவது சுற்றுக்கு அணிகள் தகுதி

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு டான் தொலைக்காட்சி நிறுவனம் நடத்தும் மாவட்ட அளவிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வரும் இப் போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிகள் உட்பட பல கால்பந்தாட்ட அணிகள் பங்குகொள்கின்றன.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்று மூன்று அணிகள் இரண்டாவது சுற்று ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதன்படி யாழ். பல்கலைகழக அணிக்கும் உரும்பிராய் அண்ணாஸ்ரார் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி வந்ததுடன் கோல் மழை பொலிந்தது. இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சென் அன்ரனீஸ் ஏ அணியும், பாடுமீன் ஏ அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பாடுமீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் அராலி சில்வஸ்ரார் அணியும், புத்தூர் விக்னேஸ்வரா அணியும் மோதின. இரு அணிகளும் மிக-வேகமான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடி ரசிகர்களை உற்காசப்படுத்தினர். மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இதுவரை ஏழு அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் நடுவர்களாக சுரேந்திரன், நெலஸ்கோ், சிங்காரம் ஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(20)

# ஜொலிஸ்ராரை சுருட்டியது யாழ். பல்கலைக்கழகம்

(யாழ்ப்பாணம்)

ஜனார்த்தனன், விதுபாலா ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியிடம் ஜொலிஸ்ரார் அணி சுருண்டது.

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட அணிகளுக் கிடையிலான 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி லீக் முறையில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் பல்கலைக் கழக அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 27 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காண்டீபன் 34, டக்சன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனார்த்தனன் ஆறு ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக களையும், விதுபாலா மூன்று ஓவர்கள் பந்து வீசி மூன்று ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 89 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். பல்கலைக் கழக அணி 15.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. கடந்த போட்டியில் சதமடித்த ஜெயரூபன்இப்போட்டியிலும் மூன்று சிக்ஸர்கள், ஏழுபவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், விதுபாலா 17 ஓட்டங்களையும் பெற்றார். இப்போட்டியில் வென்றதன் மூலம் யாழ். பல்கலைக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(12)

## இறுதிப்போட்டி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைப் பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தொடரின்இறுதிப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்கு கொண்டன.

இதில் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு அளவெட்டி மத்திய இளைஞர் அணியை எதிர்த்து இளவாலை இளஞ்சுடர் இளைஞர் அணியும், பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்குகாங்கேசன்துறை ஐக்கிய இளைஞர் அணியை எதிர்த்து அளவெட்டி இளங்கதிர் இளைஞர் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளைப் பிரதேச மட்டத்தில் முன்னணி அணிகளாகத் திகழும் மேற்படி அணிகள் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமையால்ரசிகர் கள் மத்தியில் இப்போட்டி பெரும் எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது.(93)



# பதக்க வேட்டை அதிகரிக்கும்

(மும்பை)

முன்னெப்போதையும் விட இந்த முறை லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பதக்க வேட்டை பல் மடங்கு அதிகரிக்கும் என இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் விஜய் மல்கோத்ரா தெரிவித்தார்.

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்க இளம் குத்துச் சண்டை வீரர்கள் தகுதி பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற விஜேந்தர் தொடர்ந்து 3ஆவது முறையாக தகுதி பெற்றுள்ளார். அவரது அனுபவம் இளம் வீரர்களுக்கு உதவியாக இருக்கும். அதே போல, ஒலிம்பிக் மல்யுத்த போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமை பெற்றிருக்கும் கீதா, வீரர்கள் அமித் குமார், யோகேஸ்வர் தத் ஆகியோரும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றனர். இவர்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். லண்டனில் இந்தியாவின் பதக்க வேட்டை முன்னெப்போதையும் விட சிறப்பாக இருக்கும் என நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஆண்கள் ஹாக்கி அணி (16 வீரர்கள்) உட்பட, இதுவரை 47 வீர, வீராங்கனைகள் லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.



# வோஸ்னியாக்கி தகுதி

(கோபன்ஹேகன்)

டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடக்கும் இ போக்ஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட நட்சத்திர வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி தகுதி பெற்றார்.

காலிறுதியில் அலைஸ் கார்னெட்டுடன் (பிரான்ஸ்) நேற்று முன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 6,0, 6,3 என்ற நேர் செட்களில் வென்றார்.

இ போக்ஸ் ஓப்பனில் அவர் ஏற்கனவே 2 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மற்றொரு கால் இறுதியில் செர்பியாவின் ஜெலினா ஜன்கோவிச் 4,6, 6,1, 6,3 என்ற செட் கணக்கில் கையா கானெபியை (எஸ்டோனியா) வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

# தொடரைக் கைப்பற்றுவோம்

(கரிபியன்)

போராடி வென்றாலும் தொடரில் முன்னிலை வகிப்பது மகிழ்ச்சி. இதே நிலையை தக்கவைத்து டெஸ்ட் தொடரை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் நாம் பின்னிலையில் இருந்தமை குறித்து இவ்வாறு அதிகம் சிந்திக்கவில்லை. போட்டியில் எவ்வாறான யுக்திகளை வெளிப்படுத்தி எதிரணியை கட்டுப்படுத்தலாம் என்பதிலேயே எமது கவனம் முழுவதும் இருந்தது.

அதன் ஒரு தந்திரோபாயமாக பந்து வீச்சில் மிகச் சிறப்பான வலுவைக் கொண்டிருந்த நாம் அதனைப்பயன்படுத்தி மேற்கிந்தியத்தீவுகள் அணியை இரண்டாவது இனிங்ஸில் சுருட்டினோம். இதுவே நாம் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முடிந்தது. இதில் ஹரிஸின் பந்து வீச்சு மிகச் சிறப்பாக இருந்ததே வெற்றிக்கு அடிப்படை. தொடர்ந்து இது போன்று எமது திறமைகளை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றுவோம்.

டெஸ்ட் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடிப்பதே எமது இலக்கு. வெகு விரைவில் அந்த நிலையை அடைவோம். அதற்கான தகுதி எங்களிடம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



# முதல் சுற்றில் மோதல்

(புதுடில்லி)

இந்தியன் ஓப்பன் பட்மின்ரன் உலக சூப்பர் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால் ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் வென்ற ஹொங்கொங் வீராங்கனை யிப் புய் யின்னுடன் மோதுகிறார்.

இந்த தொடர் புதுடில்லியில் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சாய்னா நெஹ்வால், சிறந்த முறையில் ஆடி வருவதால் இப்போட்டியில் வெல்ல பல யுக்திகளை போட்டிக் களத்தில் வெளிப்படுத்துவேன். உள்ளூர் ரசிகர்கள் மத்தியில் ஆடுவது என்பது எப்பொழுதுமே சவாலானது. அதேவேளை எமக்கு அது சாதகமானதும் கூட. இப்போட்டித் தொடரில் வெல்ல வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்காக உறுதியுடன் போராடி வெற்றிக் கனியைப் பறிக்க முயற்சிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# குறைத்து மதிப்பிடாதீர்

(கொல்கத்தா)

தொடர்ந்து இரண்டு போட்டிகளில் தோல்வி அடைந்ததன் மூலம் எம்மை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம். அடுத்து வரும் போட்டிகளில் எழுச்சி பெறுவோம் என ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

131 ஓட்டங்கள் என்பது நல்ல ஓட்ட எண்ணிக்கைதான். நாங்கள் தொடக்கத்திலேயே விக்கெட்டைக் கைப்பற்றாமல் விட்டுவிட்டோம். தொடர்ந்து 2 ஆட்டங்களில் தோற்றதால் கவலைப்படவில்லை. மீண்டும் எழுச்சி பெறுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அணியின் வெற்றிக்கு முயற்சி

(கொல்கத்தா)

அணியின் வெற்றியில் பங்கெடுப்பதென்பது மகிழ்ச்சியே. அந்த வகையில் ராஜஸ்தான் றோயல் அணியை வீழ்த்த நான் அதிக பங்காற்றியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி. தொடர்ந்தும் இதுபோன்று அணியின் வெற்றிக்குப் பங்காற்ற முயற்சிப்பேன் என கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சகலதுறை வீரர் சகீப் அல் ஹசன் தெரிவித்தார். தொடக்கத்திலேயே விக்கெட் கைப்பற்றியதால் எனது நம்பிக்கை அதிகரித்தது. நேர்த்தியாக பந்துவீச முடிந்ததால் விக்கெட்டைக் கைப்பற்றினேன். துடுப்பாட்டம் செய்யும்போது பவுண்டரி அடித்தால் நல்லது என்று கருதியபோது சிக்சர் அடித்தது முக்கிய பங்கு வகித்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# வென்றது கொல்கத்தா

(கொல்கத்தா)

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியுடனான லீக் ஆட்டத்தில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

கொல்கத்தா, ஈடன் ஹர்டன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இப்போட்டி யில், நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய தொடக்க வீரர்களாக கப்டன் ராவிட், ரஹானே களமிறங்கினர். ரஹானே 19 ஓட்டங்கள் எடுத்து ஹாகிப் பந்துவீச்சில் பிஸ்லா வசம் பிடிபட்டார். அடுத்து வந்த மெனரியா 1 ஓட்டம் மட்டுமே எடுத்து ரன் அவுட் ஆனார். ராவிட் 28 ஓட்டங்கள் எடுத்து வெளியேற ராஜஸ்தான் தடுமாறியது.

இந்த நிலையில் கோஸ்வாமி ஒவைஸ் ஷா ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 59 ஓட்டங்கள் சேர்த்தது. கோஸ்வாமி 24, ஷா 31 ஓட்டங்கள் எடுத்தனர். ராஜஸ்தான் 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்தது. பந்துவீச்சில் ஹாகிப் அல் ஹசன் 3, சுனில் நரைன் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

பதிலுக்கு 132 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா களமிறங்கியது. அந்த அணி 19.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பு 137 ஓட்டங்கள் எடுத்து வென்றது. கலிஸ் 31, கம்பீர் 11, பிஸ்லா 29, திவாரி 24, ஹகிப் 16 ஓட்டங்களைப் பெற்றனர். ராஜஸ்தான் பந்து வீச்சில் போத்தா, அமீத், ஹாக்கு, மெனரியா தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

# அறிவார்ந்த டெஸ்ட் தலைவராக டோனி இல்லை என்கிறார் அசார்



(புதுடில்லி)

மஹேந்திர சிங் டோனி அறிவார்ந்த டெஸ்ட் தலைவர் இல்லை என இந்திய அணியின் முன்னாள் தலைவர் மொஹமட் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

மூன்று வகையான போட்டிகளுக்கும் வெவ்வேறு தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஒருநாள் மற்றும் ருவென்ரி–20 கிரிக்கெட் போட்டிகளில் மஹேந்திர சிங் டோனி சிறந்த தலைவராகச் செயற்படுகின்றார்.

எனினும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்தவரை குறைந்தளவிலான அறிவே அவரிடம் காணப்படுகிறது.

தலைவர் பதவி அழுத்தம் மஹேந்திர சிங் டோனிக்கு காணப்படாத விடத்து அவரின் விளையாட்டில் மாற்றத்தை சிலவேளை அவதானிக்கலாம். எ

அவுஸ்ரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகளுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடர்களை முழுமையாக இழந்தமை டெஸ்ட் போட்டிகளில் இவருக்கு இருக்கும் அறிவற்ற தன்மையைக் காட்டுகிறது.

நம்பிக்கை மற்றும் தயார்படுத்தல்கள் குறைவாக இருந்தமையே இந்தத் தோல்விகளுக்கு முக்கிய காரணங்கள்.

ஓய்வு பெற்றுள்ள ராகுல் ராவிட்டின் இடத்தினை நிரப்பக்கூடிய சிறந்த வீரர் ஹைதராபாத்தினைச் சேர்ந்த ரோஹித் சர்மாதான்.

ரோஹித் சர்மா திறமையான ஒரு வீரர். மூன்று வகையான போட்டிகளிலும் விளையாட அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாணயச் சுழற்சி முக்கியம்

ருவென்ரி 20 ஆட்டத்தில் நாணயச் சுழற்சி வெல்வது என்பது மிகவும் முக்கியம். பெரும்பாலும் நாணயச் சுழற்சியை வெல்வதைப் பொறுத்தே ஆட்டத்தின் போக்கு உள்ளது என புனே அணியின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் அணியுடனான போட்டியில் நாணயச் சுழற்சியில் நாம் வென்றிருந்தால் முதலில் பந்து வீசத் தான் முடிவு செய்திருப்பேன். பஞ்சாப் அணி வீரர்களின் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. அவர்களின் செயற்பாடு பாராட்டுக்குரியது. நாங்கள் துடுப்பாட்டத்தின் போது நுணுக்கத்தை சரியாகப் பயன்படுத்தி குறைந்தபட்சம் 140 ஓட்டங்களாவது சேர்த்து இருக்க வேண்டும். 115 ஓட்டங்கள் எடுத்தது போதுமானது கிடையாது. நாங்கள் துடுப்பாட்டத்தில் இன்னும் சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். சிறந்த பந்து வீச்சாளர்கள் இருந்தும் எங்கள் அணியின் பந்து வீச்சு சிறப்பாக அமையாதது ஏமாற்றம்தான். எல்லா நேரங்களிலும் 160 ஓட்டங்கள் சேர்த்தால் எதிரணிக்கு கடினமான இலக்காக இருக்கும். இந்தத் தோல்வியில் இருந்து பாடம் கற்றுக்கொள்வோம் என்று நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜெனிவா பிரேரணை

இலங்கையின் மீதான அமெரிக்க பிரேரணை வருவதற்கும், அது வெற்றிபெறுவதற்கும் யார் காரணம்? இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் தொடர்ச்சியாக பேசிவரும் மனித உரிமை அமைப்புக் கள் இதற்கு தாமே காரணம் என்று வாதிடலாம். புலம்பெயர் நாடுகளில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் இலங்கை அரசுக்கு எதிராக திரண்டு நின்று போராடிய புலம்பெயர் தரப்பினர், அமெரிக்கா தமது அழுத்தங்களினால் தான் இத்தகையதொரு பிரேரணையைக் கொண்டு வந்தது என்று கூறலாம். அவ்வாறானவர்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் வெள்ளை மாளிகைக்கு முன்னால் திரண்டு நின்று அமெரிக்காவிற்கு நன்றியும் தெரிவித்திருக்கின்றனர்.

**- யதீந்திரா கட்டுரையிலிருந்து.**

ஆனால் த.தே.கூட்டமைப்போ - இவைகள் அல்ல காரணம். நாம் தொடர்ந்தும் உறுதியுடன், இலங்கைக் குள் இருந்தவாறு அரசின் எதேச்சாதி கார போக்கிற்கு எதிராகப் போராடி வந்ததால்தான் இத்தகையதொரு நிலைமை உருவாகியது. நாங்கள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத் துக்கும் அழுத்தங்களைக் கொடுத்த தால்தான் மேற்படி நாடுகள் இலங்கைக்கு எதிராக வாக்களித்தன என்று வாதிடலாம்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள் கையை மாற்றியமைக்கும் வகையில் தமிழக தேசியவாத சக்திகள் கொடுத்த அழுத்தத்திற்கு அடிபணிந்தே இந்தியா மேற்படி பிரேரணையை ஆதரித்தது, இதன் காரணமாகவே ஏனைய பல நாடுகளும் அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன என்றும் சிலர் சொல்லக் கூடும். செந்தமிழன் சீமானும், வை.கோபாலசாமியும் இல்லா விட்டால் இது நடந்திருக்காது என்று வாதிடும் மேதைகளும் நம்மத்தியில் இல்லாமலில்லை. அவ்வாறு சிந்திப்பதற்கு த.தே.கூட்டமைப்பிலும் கூட ஓரிருவர் உண்டு.

தமிழில் ஒரு பழமொழி சொல்வார் கள் - ஏதோ "கேட்கிறவன் கேணயன்" என்று அதன் அடி தொடங்கும். ஜெனிவா பிரகடனத்திற்கு பின்னர் வெளிவரும் இவ்வாறான வாதங்களை கேட்க நேரும் போதெல்லாம் அந்த பழமொழியே நினைவுக்கு வருகிறது. பொதுவாக தமிழ் சூழலில் காணப்படும ஒரு பெரிய குறைபாடு, எல்லாவற்றிலும நுனிப் புல் மேய்வது, பின்னர் அதனை ஒரு கண்டுபிடிப்பாக பறைசாற்றுவது. இத்தகைய பார்வைதான் இன்றுவரை நமது சூழலில் "உலக ஒழுங்கு" என்று ஒன்று இருப்பதையும் அது நமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட இயங்குநிலையைக் கொண்டது என்பதையும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியாமல் போனமைக்கான காரணமாகும்.

ஒரு வாதத்திற்கு மேற்படி அபிப் பிராயங்களை சரியென்றே எடுத்துக் கொள்வோம். நம்மில் சிலர் சொல்லி வருவது போன்று, தமது அழுத்தங் களினால்தான் இன்று அமெரிக்காவும் இந்தியாவும் தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டன என்பது உண்மை யானால், யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற வேளையில், குறிப்பாக புலிகள் தமது இறுதி நாட்களை எண்ணிக்கொண்டி ருந்தபோது ஏன் இத்தகைய அழுத்தங் களைக் கொடுத்து அவர்களை காப்பாற்ற முடியவில்லை. இன்று பயன்பட்ட அழுத்தங்கள் ஏன் அன்று பயன்படவில்லை அல்லது புலிகள் அழிவடைய வேண்டும் என்பதுதான் உங்கள் அனைவரதும் விருப்பமாக இருந்ததா?

உண்மையில் அமெரிக்கா இலங்கை அரசு தொடர்பில் பிரேரணையை சமர்ப்பித்ததற்கும், பின்னர் அது வெற்றி பெற்றதற்கும் மேற்படி வாதங் களுக்கும் எந்தவிதமான நேரடி தொடர் புகளும் இல்லை என்பதே உண்மையி லும் உண்மை. ஆனால் சில மறைமுக மான தொடர்புகள் இருக்கின்றன என்பதை மறுக்கவில்லை. குறிப்பாக த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும், மனித உரிமை அமைப்புக்களின் விமர்சனங்களையும் குறிப்பாக சனல் - 4 இன் ஊடான உலகளாவிய பிரசாரங் களையும் தனது பிரேரணைக்கான நியாயமாக அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டது. உலகின் அதிபெரும் சக்தி என்னும் வகையில் அமெரிக்காவால் இத்தகைய தலையீடுகளைச் செய்ய முடியும் என்பது ஆச்சரியமான ஒன்று மல்ல. ஆனால் அமெரிக்காவின் இத்த கைய தலையீட்டை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்ளப் போகின்றோம்?

அமெரிக்கா இலங்கையின் பொறுப்புக் கூறல் (Accountability) தொடர்பில் தொடர்ச்சியான அழுத்தங் களை பிரயோகித்து வருவதற்கும், அதன் சமீபகால மூலோபாய நகர்வு களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. அமெரிக்க வெளிவகாரச் செயலர் கிலாரி கிளின்ரன், 2011 ஆம் ஆண்டு வெளிவிவகாரக் கொள்கை (Foreign policy) சஞ்சிகையில் எழுதிய தனது கட்டுரையில், மூலோபாய ரீதியில் ஆசியா பெற்றுவரும் முக்கியத்துவத் தையும் அதில் அமெரிக்காவின் ஈடுபாட்டையும் பகிரங்கமாக குறிப் பிட்டிருந்தார். கிளின்ரன் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தை உலகளாவிய அரசியலில் ·பிரதான ஓட்டுநர் (key driver) என்று வர்ணித்திருந்தார்.



அவர் குறிப்பிட்டிருக்கும் பிறிதொரு விடயம் மிகுந்த முக்கியத்துவமுடையது...

"அமெரிக்கா ஒரு முக்கிய திருப்பு முனையில் நிற்கிறது. ஈராக்கில் யுத்தக் காற்று ஓய்ந்துவிட்டது. ஆப்கானிஸ் தானில் இருந்து எமது படைகளை திருப்பி அழைத்துக் கொண்டிருக்கி றோம். அமெரிக்கா கடந்த பத்து வருடங்களில் ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய இரண்டு திரையரங்குகளிலும் பெருமளவு வளத்தை ஒதுக்கியிருந்தது. நாம் ஒரு திடமான முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது, அடுத்த பத்தாண் டுகளில் நமது தலைமைத்துவத்தை நிலைநிறுத்தும் வகையிலும், நமது நலன்கள், விழுமியங்கள் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் நமது சக்தி மற்றும் நேரத்தை செலவிட வேண்டியிருக்கிறது. அடுத்த பத்தாண் டுகளில் ஆசிய - பசுபிக் பகுதியில் நீடித்து நிலைக்கக்கூடிய பொருளாதார, ராஜதந்திர, தந்திரோபாய மற்றும் மூலோபாய விடயங்களில் முதலீடு களை அதிகரிப்பதுதான் அமெரிக்கரின் மிக முக்கியமான சாணக்கிய இலக்காகும்...

கிலாரி தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் பிறிதொரு விடயம் மிகுந்த கவனத்திற்குரியது - "ஆசியா, அமெரிக்காவின் எதிர்காலத்திற்கு ஆபத்தாக இருக்கிறது. ஆயினும் அமெரிக்காவின் ஈடுபாடு ஆசியாவின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமாக இருக்கிறது. எங்களது தலைமைத்துவத் திற்காகவும். வியாபாரத்திற்காகவும் இந்தப் பிராந்தியம் ஏக்கத்தோடு இருக்கிறது. ஒரு வேளை இது நவீன வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத ஒன்றாக இருக்கலாம்."

இந்த இடத்தில்தான் இலங்கை மூலோபாய நோக்கில் முக்கியத்துவம் பெறுகிறது. யுத்த வெற்றிக்கு சொந் தமான இலங்கை அரசின் சமீபகால நகர்வுகள், அமெரிக்காவின் ஆசியா நோக்கிய மூலோபாய நகர்வுகளுக்கு குந்தகமாக அமைந்திருக்கின்றன. அது எவ்வாறான குந்தகமாக இருக்க முடியும்? ஆசியாவை நோக்கி நகர்த்தப் பட்டிருக்கும் அமெரிக்காவின் மூலோபாய நகர்வில், அது இரண்டு வகையான தடைகளை எதிர்கொள்ளக் கூடும்... ஒன்று, சீனா, ரஷ்யா மற்றும் அவற்றுடன் கூட்டணி அமைத்திருக்கும் ஈரான் போன்ற நாடுகளின் மூலம் அமெரிக்க மூலோபாயம் நெருக்கடி களை சந்திக்கலாம். மற்றையது, மத்திய கிழக்கு நாடுகள் எங்கும் பரவிவரும் இஸ்லாமிய தீவிரவாத வலையமைப்புக்கள் (Chain of Terrorism) அமெரிக்க நகர்வுகளுக்கு முட்டுக்கட்டையாக அமையலாம்.

யுத்த நிறைவுக்கு பின்னர் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்து வருவதானது அமெரிக்க ஆர்வங்களுக்கு ஏற்புடைய ஒன்றல்ல. தவிர, அது இந்திய ஆர்வங்களுக்கும் ஏற்புடைய ஒன்றல்ல. இந்த பின்புலத்தில்தான் நாம் அமெரிக்காவின் சமீபகால அழுத்தங்களையும், அதற்கு இந்தியா மறைமுகமான ஆதரவை வழங்கி வருவதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். ஜெனிவா விடயம் ஆரம்பித்த நாளிலிருந்து அதன் முடிவு வெளியா கும் வரை நமது ஆய்வாளர்கள் பலரும், இந்தியாவை கடுமையாக விமர்சித்து வந்தனர். இந்தியாவே ஜெனிவாவில் இலங்கையை காப்பாற்றப் போவதாகவும் கூறி வந்தனர் ஆனால் இந்தியா தனது முடிவை வெளிப்படுத்தியதும் அவ்வா றானவர்கள் திகைத்துப் போனார்கள். விடயங்களை குறிப்பான சூழலில் நின்று நோக்காமல் எங்களுடைய பிரச்சினையை மட்டும் மையப்படுத்தி சிந்திப்பதன் விளைவே அத்தகைய அவசர ஆய்வுகளுக்கு காரணமாகும்.

இதுவரை இந்தியா, கொழும்பை திருப்திப்படுத்துவதையே தனது முதன்மையானதொரு அணுகுமுறை யாக கடைப்பிடித்து வந்தது. ஆனால் ஜெனிவா விடயத்தில் இந்தியா அத்தகையதொரு முடிவை எடுக்க வில்லை. இதனையும் நாம் மேற்படி அமெரிக்காவின் ஆசியா நோக்கிய மூலோபாய நகர்வுகளின் பின்னணி யிலேயே உற்று நோக்க வேண்டும். இன்றைய ஒழுங்கில், அமெரிக்கா தனது மிக முக்கிய மூலோபாய பங்காளியாக இந்தியாவையே கருது கிறது. பராக் ஒபாமாவின் வார்த்தையில் சொல்வதானால் இந்திய - அமெரிக்க உறவானது 21ஆம் நூற்றாண்டின் நிர்ணயிக்கும் பங்காளியாக அமையும் (defining partnerships of the 21st century). இந்த பின்னணியில்தான் அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. ஒரு வேளை அமெரிக்கா வால் இது முன்வைக்கப்படாது இருந்திருந்தால் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருக்கலாம். ஆனால் அமெரிக் காவின் தீர்மானத்தில் இந்தியா திருத்தங்களை செய்தது என்பதெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட பிரசாரங்களே ஆகும். திருத்தம் செய்வதற்கு அது ஒன்றும் பாரதூரமான பிரேரணை அல்ல. மூத்தோர் அமைப்பைச் சேர்ந்த அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மரி றொபின்சன் குறிப்பிட்டிருப்பது போன்று அது ஒரு "மென்மையான தீர்மானம்" மட்டுமே ஆகும். ஆனால் இதனை அரசு எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றது என்பதை பொறுத்து விளைவுகள் அமையலாம்.

---

"மயக்கம் என்ன?" படத்தைத் தொடர்ந்து செல்வராகவன் இயக்கும் படம் "இரண்டாம் உலகம்". இதில் ஆர்யா, அனுஷ்கா இருவரும் இரட்டை வேடங்களில் நடிக்கின்றனர். ராதிகா, வை.ஜி.மகேந்திரன்

## பிசியான ஸ்டார் வேண்டாம்!



ஆகியோரும் நடிக்கிறார்கள். "ஆர்யா, அனுஷ்கா இருவரும் எந்தத் தலையீடும் செய்யவில்லை. ஷூட்டிங் தொடங்குவதற்கு முன்பு சிவகார்த்திகேயன் பிஸி இல்லை. இப்போது அவரும் பிஸி என்பதால் அவர் இப்படத்தில் நடிக்கவில்லை. ஹீரோ, ஹீரோயின் தவிர மற்ற அனைவருமே புதுமுகங்கள்தான். நான் எப்போதுமே பிஸியான ஸ்டார்களை தேடிப்போவதில்லை" என்கிறார் செல்வராகவன். சில காட்சிகளில் நடித்த தம்பி தனுஷும் பிஸியாகிவிட்டதால் இப்படத்திலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரும்புப் பெண்மணியாக நடித்த அழகி!

உலக நாடுகளில் உள்ள அனைத்து ஹொலிவுட் ரசிகர்களும் மெரில் ஸ்ட்ரீப்புக்கு அளிக்கப்பட்டிருக்கும் மூன்றாவது ஒஸ்கார் விருதுக்காக இன்னமும் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வருடம், சிறந்த நடிகைக்கான ஒஸ்கார், வயோலா டேவிஸுக்கா (தி ஹெல்ப்), மெரிலுக்கா (தி அயர்ன் லேடி) என்று கடுமையான போட்டி நிலவியது. இருபக்கமும் சரிசமமான ஆதரவாளர்கள் திரண்டார்கள். இறுதியில், மார்க்ரெட் தட்சரைக் கண்முன் நிறுத்திய மெரிலுக்கு ஒஸ்கார் அங்கீகாரம்.

முன்னால், முறையாக நாடகப் பயிற்சி, படிப்பு எல்லாம் பயின்று சினிமாவுக்காகத் தயாராக இருந்தார். "ஆரம்ப காலங்களில், நான் அவ்வளவு அழகில்லை என்றே நினைத்ததால் பல வருடங்களை வீணடித்துவிட்டேன்" என்கிறார் மெரில்.

சினிமா பிரவேசத்துக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம் மெரிலைச் சீண்டிப் பார்த்தது. கிங்கொங் படத்துக்காக நேர்முகச் சோதனைக்குச் சென்றபோது, மெரிலைப் பார்த்த தயாரிப்பாளர் லாரண்டிஸ், "இந்தப் பெண் அசிங்கமாக இருக்கிறார்.

ஒஸ்கார், பே.்.ப்டா, கோல்டன் குளோப போன்ற ஜாம்பவான் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப் பட்டார்.

திருமண பந்தத்துடன் ஒத்துப்போக முடியாத ஹொலிவுட் நடிகைகளுக்கு மத்தியில், டான் கம்மருடன் 34 வருடங்களாக வாழ்ந்து வருகிறார் மெரில். நான்கு குழந்தைகள்.

இதுவரை, 17 தடவை சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் தேர்வுக்காகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார். மெரில்



மெரிலுக்குக் கிடைத்த மூன்று ஒஸ்கார்களும் திருமணத்துக்குப் பிறகு நடித்த படங்களுக்காக வழங்கப்பட்டவை. மெரில், ஓய்வுபெறும் வயதைத் தாண்டிவிட்டாலும் (62), ஹொலிவுட்டில் அதிகம் சம்பாதிக்கும் முதல் பத்து நடிகைகளில் ஒருவர். வருட வருமானம், 50 கோடி ரூபாய். ஒரு படத்துக்கு 25 கோடி ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம்.

28 வயதில்தான் மெரிலுக்கு முதல்பட வாய்ப்பு (ஜூலியா) கிடைத்தது. அதற்கு



இவரை யார் அழைத்து வந்தது?" என்று மெரிலின் முன்னாலேயே கூற, "உங்களை ஏமாற்றியதற்கு மன்னிக்கவும்" என்று உணர்ச்சிவசப்படாமல் சொல்லிவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார் மெரில்.

இரண்டாவது படத்திலேயே மிகச் சிறந்த நடிகையாக தன்னை நிரூபித்தார் மெரில். "தி டீர் ஹண்டர்" படத்துக்காக அளவுக்கு ஒஸ்காருக்கும் கோல்டன் குளோப் விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நடிகர் சரித்திரத்திலேயே கிடையாது. "ஒவ்வொருமுறையும் ஒஸ்காருக்காகப் பரிந்துரைக்கப்படும்போது, விருது மேடையில் ஆற்ற வேண்டிய என் உரையை உடனே தயாரித்துவிடுவேன். அதில், மூன்று தான் மேடையேற்றப்பட்டுள்ளன. என்றாலும், மீதமுள்ள 14 கட்டுரைகளையும் புத்தகமாக வெளியிடுவேன்" என்று தன் தோல்விகளைக்கூட சுவையான அனுபவமாக மாற்றுகிறார் மெரில்.

இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமர் மார்க்ரெட் தட்சரின் வேடத்தில் சிறப்பாக நடித்ததற்காக மூன்றாவது ஒஸ்கார கிடைத்திருக்கிறது. "நிறைய புத்தகங்களைப் படித்து தட்சரைப் பற்றி அறிந்து கொண்டேன். தினமும் மேக்அப்புக்காக இரண்டரை மணி நேரம் செலவானது" என்கிற மெரில் இந்தப் படத்துக்காக வாங்காத விருதுகள் இல்லை, பெறாத ரசிகர் கள் இல்லை. தி அயர்ன் லேடியில், தாட்சரைப் போலவே மெரில் பேசிக் காட்டியதில் எந்த ஓர் ஆச்சரியமும் இருக்க முடியாது. இதுபோல பல தேசத்துக் கதாபாத்திரங்களை ஏற்று நடித்த மெரில் அந்தந்தப் பிராந்தியத்துக்கேற்ற வட்டார மொழியை அபாரமாகப் பேசிவிடுவார். "நான் ஒரு கதாபாத்திரத்தைத் தேர்ந்தெடுத்தால் அதற்குரிய நியாயத்தைச் செய்ய வேண்டும். அதில் எப்படி என்னைப் போல பேச முடியும்?" என்கிறார்.

வயதாவதால் சினிமா வாய்ப்புகள் விலகிப்போகுமே என்கிற சராசரிக் கவலைகளெல்லாம் மெரிலுக்கு அறவே கிடையாது. "வயதானாலும், திரையில் நான் மிக இளமையாகவே தோற்றமளிக்கிறேன். இது என்னை உற்சாகத்தோடு இயங்க வைக்கிறது. மேலும், இந்த வயதில் நான் உயிரோடு இருப்பதையே கொடுப்பினையாக எண்ணுகிறேன்." என்கிறார் 62 வயதான அழகி.

## பறவை நிபுணர்

பறவைகளை பற்றிய
கவிதைகளுக்காக
பறவைகளை தேடி
சதுப்புக்காடுகளில்
அலைந்த ஒருநாளில்
நிபுணரொருவனை
சந்திக்க நேரிட்டது.
பறவைகள் பற்றி
பல தகவல்களை சொன்னான்
சலீம்அலி பற்றி
நிறைய பேசினான்
அரிவாள் மூக்கன்
அபூர்வமாய்
வருகிறதாய் சொன்னான்
கூழைக்கடா
கூடு கட்டுவதை
சிலாகித்து சொன்னான்
நீண்ட நாள் சந்தேகமான
நெற்குருவிக்கு
இன்னொரு பெயர்
வானம்பாடியென்பதை
உறுதி செய்தான்.
பெயிண்டட் ஸ்டாக்
அல்லது வண்ணநாரை
ஸ்நேக்பேர்ட் அல்லது பாம்புத்தாரா

ஸ்பூன்பில் அல்லது துடுப்புவாயன்
விசிலிங்டக் அல்லது மரத்தாரா
பெயர்களை
அடுக்கியபடியே நடந்தான்
சற்றுமுன் பார்த்த
செனகல் கிளிகள்
ஆபிரிக்காவிலிருந்து
வருடம் தவறாமல்
வருவதாக சொன்னான்.
முன்னி வௌவால்
முக்குளிப்பான் கூட
நாமக்கோழி
நீர்க்கோழி பற்றியும் விவரித்தான்.
இறுதியாக
புறாக்கறி லேசாக தித்திக்கும்
என்ற தகவலையும்
சொன்னான்.



- என். விநாயகமுருகன் -

## தளபதி புகழ்மாலை!

விஜய் ரசிகர்கள், விஜயைப் பற்றி "தளபதி அல்பம்" என்ற பெயரில் சிடி வெளியிட்டுள்ளனர். இரண்டு பாடல்களைக் கொண்ட இந்தக் காட்சி இசைத் தொகுப்பு பெரும் செலவில் படமாக்கப்பட்டுள்ளது. இந்த ஆல்பத்தை விஜய்க்கு போட்டுக் காண்பித்து அவரது ஒப்புதலையும் வாங்கிவிட்டனர் ரசிகர்கள். விஜய் பற்றிப் புகழும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்தப் பாடல்கள் முழுக்க முழுக்க விஜய் ரசிகர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இறுவட்டை விஜய் நேற்று வெளியிட்டார்.



# நினைவுத்திறன் ஓர் ஆராய்ச்சி!

சில பல நாட்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வையோ அல்லது செய்த செயலையோ சரியாக நினைவில் வைத்திருந்து சொல்வது மிகவும் கடினமான ஒன்று. இது ஞாபக மறதிக்காரர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், ஒரு சிலர் இருக்கிறார்கள், முப்பது நாப்பது வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயங்களை இப்போது கேட்டாலும் மிக துல்லியமாக நினைவு கூர்ந்து இம்மி பிசகாமல் அப்படியே விவரிப்பார்கள். இது நமக்கு பிரமிப்பாக இருக்கும். "உண்மையில் எவ்வளவு விஷயங்களை நம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது என்பதில் பெரிய விசேஷம் ஒன்றுமில்லை. ஆனால், குறிப்பிட்ட ஒரு விஷயத்தை சரியாக நினைவு கூர்ந்து எப்படி சொல்ல முடிகிறது என்பதுதான் எனக்கு மிகவும் பிரமிப்பாக இருக்கிறது" என்கிறார் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக ஆய்வாளர் பிரைஸ் குல்.


பழைய நினைவுகளுக்கும் புதிய நினைவுகளுக்கும் இடையில் நடக்கும் போட்டிதான் "நினைவுத்திறன்" என்கிறது அறிவியல். நினைவுத்திறன் குறித்த முழு புரிதல் மற்றும் நினைவுத்திறன் குறைபாட்டினால் ஏற்படும் மூளைக் கோளாறுகள் குறித்து ஆய்வுகள் செய்யும் குல், புதிய நினைவுகளுக்கும் பழைய நினைவுகளுக்கும் இடையிலான போட்டியை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்காக, குல் மற்றும் அவருடைய ஆய்வுக் குழுவினர் 24 மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களிடம் "ஒரு புகைப்படம் மற்றும் ஒரு வார்த்தை" சேர்ந்த பல இணைகளை கொடுத்து அவற்றை வரிசையாக நினைவில் வைத்துக்கொள்ளச் சொன்னார்கள். அதன் பிறகு, கடைசியாக கொடுக்கப்பட்ட புகைப்படம், வார்த்தை இணை குறித்து விவரிக்கச் சொன்னார்கள். மாணவர்களுக்கு ஒரு நினைவை உருவாக்க, ஒரு முகம் அல்லது ஒரு பொருள அல்லது ஒரு காட்சி, இவற்றுக்கு மேலே ஒரு சம்பந்த மில்லாதவார்த்தையை காண்பித்து நினைவில் வைத்துக்கொள்ளச் சொன்னார்கள்.

உதாரணமாக, அமெரிக்க அரசியல்வாதி "அல் கோரே"வின் புகைப்படத்துக்கு மேலே "நீச்சல்" எனும் ஒரு வார்த்தை காண்பிக்கப்பட்டது (இது பழைய நினைவு). அதன்பிறகு, நீச்சல் எனும் வார்த்தைக்கு கீழே உள்ள அல் கோரேவின் புகைப்படத்தை நீக்கிவிட்டு அங்கு "க்ராண்ட் கேன்யான்" எனும் பிரபல இடத்தின் புகைப்படம்/காட்சியை வைத்து நினைவு வைத்துக் கொள்ளச் சொன்னார்கள் (இது புதிய நினைவு). அதன்பிறகு, மூளையை ஸ்கேன் செய்யும் ஒரு ஸ்கேனருடன் மாணவர்களை இணைத்துவிட்டு, நீச்சல் எனும் வார்த்தையை அவர்களுக்கு காண்பித்து அதற்கு கீழே புதிய நினைவில் என்ன புகைப்படம் இருந்தது என்று கேட்டார்கள்.

மூளையின் குறிப்பிட்ட பாகங்கள் வெவ்வேறு வகையான புகைப்படங்களுக்கு (முகம்∴காட்சி∴பொருள்) ஏற்றவாறு எதிர்வினை செய்யக் கூடியவை. மூளை ஸ்கேன் தகவல்களை அடிப்படையாக வைத்து, ஒருவர் ஒரு முகத்தை அல்லது ஒரு காட்சியை அல்லது ஒரு பொருளை பார்க்கிறாரா என்பதை அறிய முடியும். மேலும் இந்த விவரத்திலிருந்து ஒருவருடைய புதிய மற்றும் பழைய நினைவுகளின் உறுதியை வரையறுத்துச் சொல்ல முடியும் என்கிறார் குல்.

இந்தப் பரிசோதனையில், ஒருவருடைய பழைய நினைவு தொடர்பான மூளைச் செயற்பாடு அதிகரித்தபோது அவரால் புதிய நினைவை சரியாக நினைவில் வைத்துக்கொள்ள இயலவில்லை



என்பது தெரியவந்தது. மேலும், ஒருவர் புதிய நினைவை சரியாக ஞாபகம் வைத்துச் சொன்னபோதும் அவருடைய பழைய நினைவு இடையில் வந்து குறுக்கிட்டது கண்டறியப்பட்டது. ஒருவருடைய பழைய மற்றும் புதிய நினைவு ஆகிய இரண்டின் உறுதியும் சமமாக இருந்தபோது, அவர்கள் ஞாபகம் குறித்த கேள்விக்கான பதிலைச் சொல்ல நிறைய நேரம் எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் ஒருவர் தேவையில்லாத ஒரு விஷயத்தை மறக்க முயற்சி செய்கிறார்கள்.

புதிய நினைவுகளை ஞாபகம் வைத்துக்கொள்ள முயற்சிக்கும்போது, தேவையில்லாத பழைய நினைவுகள் குறுக்கீடு செய்து நினைவுத் திறன் குறைபாடுகளை உருவாக்குகின்றனவா என்கிற சந்தேகம் விஞ்ஞானிகளுக்கு நீண்டகாலமாக இருந்து வருகிறது.

நினைவுத் திறன் குறைபாடுகள் இல்லாத, ஆரோக்கியமான மாணவர்கள் மீதான இந்த ஆய்வு முறையை பயன்படுத்தி, நினைவுத் திறன் குறைபாடுள்ளவர்களின் மூளையில் என்ன நடக்கிறது என்பதை ஆய்வு செய்து அறிந்துகொள்ள முடியும். அதன்மூலம் நினைவுத் திறன் குறைபாடுகளுக்கான ஒரு தீர்வை கண்டறிந்துவிட முடியும் என்பது ஆய்வாளர் குல்லின் நம்பிக்கை. நம்பிக்கைதானே வாழ்க்கை.

## விசேட ரயில் சேவை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களின் போது வீடு திரும்பிய மக்கள் மீண்டும் கொழும்பு திரும்புவதற்காக விஷேட தொடருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை தொடருந்து திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்ஹ வெளியிட்டுள்ளார்.

விஷேடமாக திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படும் கரையோர தொடருந்துப் பாதையில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை சேவைகள் இடம் பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகரிக்கும் ஆட்கடத்தல்கள்; அரசு மீது கணை தொடுக்கிறது ஐ.தே.க.

(கிளிநொச்சி)



அதிகரித்துள்ள கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் அரசாங்கம் செயற்படுவதாக தான் நம்புவதாக முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளருமான மங்கள சமரவீர குற்றம்சாட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்களையும் மாற்றுக்கருத்துகளை முன்வைப்போரை ஒடுக்கும் நோக்கில் கடத்தல் சம்பவங்கள் அரசாங்கத்தால் கையாளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 2009 இல் போர் முடிவடைவதற்கு முற்பட்ட காலத்தில் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் மீதான படுகொலைகள் மற்றும் "வெள்ளை வான்" கடத்தல் சமபவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. சண்டே லீடர் நாளிதழின் ஆசிரியர் லசந்த விக்ரமசிங்க உநதுருளி ஆயுததாரிகளால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் அண்மைக் காலம் வரை 30 வரையான "வெள்ளைவான்" கடத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து "வெள்ளை வான்" கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள் மிகவும் அதிகரித்துள்ளன. கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் இன்றைய நிலை தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் சிறிலங்கா அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னர் புலிச் சந்தேக நபர்கள் மீது கையாளப்பட்ட கடத்தல் மற்றும் காணாமல்போகச் செய்தல் சம்பவங்கள் தற்போது அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ளது என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

## சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு முனைப்பான நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தத்துக்கு முந்திய நிலையில் இலங்கையை மீண்டும் ஆசியாவிலேயே சிறந்த சுற்றுலாத் தளமாக்கும் முயற்சியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியாக சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த வகையிலான 15 ஆயிரம் விடுதி அறைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் நான்கு வருட காலப்பகுதியினுள் மேலும் 35 ஆயிரம் விடுதி அறைகள் சுற்றுலாப் பயணிகளின் பாவனைக்கு தேவைப்படும் என சுற்றுலா அபிவிருததி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## கடத்தல் வாகன சாரதியை தேடி வலை விரிக்கப்படுகிறது

(கிளிநொச்சி)



வெள்ளைவான் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய சாரதி ஒருவர் பற்றிய தகவல்களை இணையததளம் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

நாட்டில் இடம்பெற்ற பாரியளவிலான கடத்தல் சம்பவங்களுடன் குறித்த வாகனச் சாரதிக்கு தொடர்பு இருப்பதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சமரஜீவ கருணாரட்ன என்ற இராணுவ கோப்ரல் ஒருவரே இவ்வாறு கடத்தல்களில் ஈடுபடும் வெள்ளை வானைச் செலுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான மேற்படி சாரதியைத் தேடிப் பொலிஸார் தற்போது பரந்த அளவில் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலை விசம்போல் ஏறுமா?

### இல்லை என்கிறது அரசு

தமிழ் சிங்கள சித்திரைப் புத் தாண்டின் பின்னர் அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளின் விலை பாரியளவில் அதிகரிக்கும் என வர்த்தகத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, பால்மா, எரிபொருள், எரிவாயு, கோதுமை மா, சீனா, உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதியிறக்கத்தினால் இறக்குமதி செலவு உயர்ந்துள்ளமை, வரி அதிகரிக்கப்பட்டுள்ளமையே இந்தப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் சிங்களப் புத்தாண்டின் பினனர் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

உடனடியாக பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வெளியிடப்படும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை எனவும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

# இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தினால் மதுபான நிலையங்களுக்கு மூடு விழா

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களது இயல்பு வாழவிற்கு இடையூறு ஏற்படுத்துகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதியை இரத்துச் செய்யுமாறு ஈ.பி.ஈ.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த புதனன்று பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்கள் இப் பணிப்புரையை சம்பந்தப்பட்டோருக்கு விடுத்தா.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் மீள்குடியேற்றம் செய்யப்படாத மக்களுக்கு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் கடற்தொழிலிற்கான அனுமதி வழங்கப்படவில்லையென பொது அமைப்பின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வைத்தியசாலைக்கு முன்பாக வீதிக்கடவையொன்று அமைக்கப்படவேண்டும் என பருத்தித்துறை வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்திருநதார். இதேவேளை இவ் வைத்தியசாலையில் அண்மைக்காலமாக சிசுமரணங்கள் அதிகரித்துள்ளதாகவும் குறைந்த காலத்தில் கூடிய சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

பிரதேச சபையின் வீதி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளுகைக்குள் பரந்தளவான பிரதேசம் உள்ளடக்கப்படுவதால் மருதங்கேணிப் பிரதேச சபை பருத்தித்துறை பிரதேச சபையென இரண்டு பிரதேச சபையாக அமைக்கப்படல் வேணடும் எனப் பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்படடது.


தொடர்ந்து உள்ளூராட்சித் திணைக்களம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம், வீதிப் புனரமைப்பு, குடிநீர் விநியோகம், வீடமைப்பு, வாழ்வு எழுச்சி (திவிநெகும) உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் இவற்றுடன் சம்பந்தப்பட்ட அபிவருத்தி தொடர்பான செயற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் சம்பந்தப்பட்டோருக்கு பணிப்புரைகளை விடுத்தார்.

## கள்ளச்சாராயம் விற்பனை நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(கொழும்பு)

கடவத்த பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்த வியாபார நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர். தமக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட தேடுதலின் போது இவ்வியாபார நிலையம் இனங்காணப்பட்டதாக கடவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையத்தில் வைத்து சட்டவிரோத மதுபானங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



காரைநகர் - வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் வருடாந்த உற்சவத் திருவிழாவில் புதிய பெரிய சப்பறத்தையும், புதுவருட புத்தாண்டில் சிற்பத் தேரில் விநாயகப்பெருமான் எழுந்தருளி வருவதையும் படத்தில் காணலாம். (50)

# கடத்தப்பட்ட இலங்கையரை மீட்டெடுக்க உதவுங்கள்

### உறவினர்கள் உருக்கம்

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பலில் கடமையாற்றும் சிப்பாயை விடுதலை செய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு அவரது உறவினர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



இலங்கையைச் சேர்ந்த கப்பல் சிப்பாய் 14 மாதங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டுள்ளார்.

சரத் சுரசேன என்கின்ற டுபாய் கப்பல் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான எம்.வீ.ஓர்னா என்ற கப்பல் ஆபிரிக்காவிலிருந்து சீனா நோக்கி பயணிக்கும்போது சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இதன்போது சுரசேன உட்பட 19 சிப்பாய்கள் கப்பலில் இருந்துள்ளனர்.

தனது சகோதரனை விடுதலை செய்துகொள்வது தொடர்பாக இதுவரை அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என சுரசேனவின் சகோதரர் நிஹால் சுரசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த இலங்கைப் பிரஜையை விடுதலை செய்து கொள்வது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக டுபாயிலுள்ள இலங்கைக்கான தூதுவர் சரத் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

# 15 Interesting Facts about Dreams



Dreaming is one of the most mysterious and interesting experiences in our lives. During the Roman Era some dreams were even submitted to the Roman Senate for analysis and dream interpretation. They were thought to be messages from the gods. Dream interpreters even accompanied military leaders into battles and campaigns!

In addition to this, it is also known that many artists have received their creative ideas from their dreams. But what do we actually know about dreams?

Here are 15 interesting facts about dreams –

1. You Forget 90% of Your Dreams

Within 5 minutes of waking half of your dream is forgotten. Within 10, 90% is gone.

2. Blind People also Dream

People who became blind after birth can see images in their dreams. People who are born blind do not see any images, but have dreams equally vivid involving their other senses of sound, smell, touch and emotion.

3. Everybody Dreams

Every human being dreams (except in cases of extreme psychological disorder). If you think you are not dreaming – you just forget your dreams.

4. In Our Dreams We Only See Faces That We already Know

Our mind is not inventing faces – in our dreams we see real faces of real people that we have seen during our life but may not know or remember. We have all seen hundreds of thousands of faces throughout our lives, so we have an endless supply of characters for our brain to utilize during our dreams.

5. Not Everybody Dreams in Color

A full 12% of sighted people dream exclusively in black and white. The remaining number dream in full color. Studies from 1915 through to the 1950s maintained that the majority of dreams were in black and white, but these results began to change in the 1960s. Today only 4.4% of the dreams of under-25 year-olds are in black and white. Recent research has suggested that those changing results may be linked to the switch from black-and-white film and TV to color media.

6. Dreams are Symbolic

If you dream about some particular subject it is not often that the dream is about that. Dreams speak in a deeply symbolic language. Whatever symbol your dream picks on it is most unlikely to be a symbol for itself.

7. Emotions

The most common emotion experienced in dreams is anxiety. Negative emotions are more common than positive ones.

8. You can have four to seven dreams in one night.

On average you can dream anywhere from one or two hours every night.

9. Animals Dream Too

Studies have been done on many different animals, and they all show the same brain waves during dreaming sleep as humans. Watch a dog sleeping sometime. The paws move like they are running and they make yipping sounds as if they are chasing something in a dream.

10. Body Paralysis

Rapid eye movement (REM) sleep is a normal stage of sleep characterized by rapid movements of the eyes. REM sleep in adult humans typically occupies 20-25% of total sleep, about 90-120 minutes of a night's sleep.

During REM sleep the body is paralyzed by a mechanism in the brain in order to prevent the movements which occur in the dream from causing the physical body to move. However, it is possible for this mechanism to be triggered before, during, or after normal sleep while the brain awakens.

11. Dream Incorporation

Our mind interprets the external stimuli that our senses are bombarded with when we are asleep and make them a part of our dreams. This means that sometimes in our dreams we hear a sound from reality and incorporate it in a way. For example you may be dreaming that you are in a concert while your brother is playing a guitar during your sleep.

12. Men and Women Dream Differently

Men tend to dream more about other men. Around 70% of the characters in a man's dream are other men. On the other hand, a woman's dream contains almost an equal number of men and women. Aside from that, men generally have more aggressive emotions in their dreams than the female lot.

13. Precognitive Dreams

Results of several surveys across large population sets indicate that between 18% and 38% of people have experienced at least one precognitive dream and 70% have experienced déjà vu. The percentage of persons that believe precognitive dreaming is possible is even higher – ranging from 63% to 98%.

*Precognition, also called future sight, refers to perception that involves the acquisition of future information that cannot be deduced from presently available and normally acquired sense-based information.

14. If you are snoring, then you cannot be dreaming.


This fact is repeated all over the Internet, but I'm a bit suspicious whether it's really true as I haven't found any scientific evidence to support it.


15. You can experience an orgasm in your dream

You can not only have s e x as pleasurable as in your real life while dreaming, but also experience an o r g a s m as strong as a real one without any wet results. The sensations felt while lucid dreaming (touch, pleasure and etc..) can be as pleasurable and strong (or I believe even stronger) as the sensations experienced in the real world.

***http://www.boredpanda.com/***

# Invisible Pedestrian Bridge in Netherlands





Ro Koster and Ad Kil Architects built this almost invisible bridge for crossing the defensive fortress in Halsteren, the Netherlands. The amazing sunken bridge sits within the water and slope surrounding the 17th Century Dutch fort and gives visitors a unique opportunity to walk trough parted waters like Moses.

The bridge was made from Accsys Technologies' Accoya wood sheet pilling on either side with a hardwood deck and stairs in between. Accoya wood was chosen for its durability, stability and sustainable benefits and is constructed using a tongue and groove method.

# Why I dislike violence

R. Thuvaragan,
B/Hindu College,
Colombo 4.

Violence begets violence" - is a familiar saying.

I dislike violence because it harms the life of human beings. Violence is a wicked act - a crime which arises out of bad or evil thoughts.

There are many types of violence. Torturing children, kidnapping youngsters or adults for money, committing sexual crimes, murder and attempting to murder others are some of them.

Religious leaders and the media inform us that violence is the root cause of all the evils which prevents the development of a country.

Violence originates mostly because of financial needs. In this hi-tec era, economics plays a major role in the development of a country. People need more and more money to meet their basic needs such as food, shelter, clothing and education today. However, most people cannot earn enough money to meet the needs of their routine day-to-day life. As a result they think of ways to overcome their financial problems even in a wrongful manner. This eventually leads to violence.

Life is difficult without money. There are many children without an education and many adults without jobs. They think that violence is the only means to meet their needs. If it spreads like an epidemic rapidly, it will be very difficult to cure. It would directly affect the progress of any country.

It is said that 'Prevention is better than cure'. Therefore, we must control violence before it grows and spreads fast. The Government should take immediate action against those who resort to violence.



They should be severely punished. The media too must play a major role and enlighten the public about the dangers of violence. Awareness programmes must be conducted by the Government. We could then minimise violence to some degree. We should try to eradicate violence.

This was the goal of Mahatma Gandhi. That is why he is called the 'Father of non-violence'.

As students, we should start to follow the path of Mahathma Gandhi and strive hard to promote non-violence without being engrossed in worthless activities.

Sunday observer

# The Greek World



**Where Western civilization began**

Ancient Greece is called 'the birthplace of Western civilization'. About 2500 years ago, the Greeks created a way of life that other people admired and copied.

The Romans copied Greek art and Greek gods, for example. The Ancient Greeks tried out democracy, started the Olympic Games and left new ideas in science, art and philosophy (thinking about life).

The Ancient Greeks lived in mainland Greece and the Greek islands, but also in what is now Turkey, and in colonies scattered around the Mediterranean sea coast. There were Greeks in Italy, Sicily, North Africa and as far west as France. Sailing the sea to trade and find new land, Greeks took their way of life to many places.

The timeline will show you some of the important events in the history of Ancient Greece.

**What was ancient Greece like?**

Ancient Greece had a warm, dry climate, as Greece does today. People lived by farming, fishing, and trade. Some were soldiers. Others werescholars, scientists or artists. Most Greeks lived in villages or in small cities. There were beautiful templeswith stone columns and statues, and open-air theatres where people sat to watch plays.

Many Greeks were poor. Life was hard because farmland, water and timber for building were all scarce. That's why many Greeks sailed off to find new lands to settle.

**How Greece was ruled**

There was not one country called "Ancient Greece." Instead, there were small 'city-states'. Each city-state had its own government. Sometimes the city-states fought one another, sometimes they joined together against a bigger enemy, the Persian Empire. Athens, Sparta, Corinth and Olympia were four of these city-states, and you can find out more about them on this site. Only a very powerful ruler could control all Greece. One man did in the 300s BC. He was Alexander the Great, from Macedonia. Alexander led his army to conquer not just Greece but an empire that reached as far as Afghanistan and India.


**When did Greek civilisation begin?**

About 3000 BC, there lived on the island of Crete a people now called Minoans. The name comes from their King Minos. Minos and other Minoan kings grew rich from trade, and built fine palaces. The Minoan civilization ended about 1450 BC.

After the Minoans came the Myceneans. They were soldiers from mainland Greece, and were the Greeks who fought Troy in the 1200s BC. After the Mycenean age ended, about 1100 BC, Greece entered a "Dark Age". This lasted until the 800s BC when the Greeks set off by sea to explore and set up colonies.

The Olympic Games begun in 776 BC. This was the start of "Archaic" Greek civilization.

Around 480 BC the "golden age" of Greece began. This is what historianscall "Classical" Greece.



**What was the Trojan War?**

The Trojans lived in the city of Troy, in what is now Turkey. The story of their war with the Greeks is told in the Iliad, a long poem dating from the 700s BC, and said to be by a storyteller named Homer. The Odyssey, also by Homer, is the tale of the adventures of a Greek soldier named Odysseus, after the war.

The Trojan War began when Paris, Prince of Troy, ran away with Helen, wife of King Menelaus of Sparta. The Greeks sent a fleet of ships, with an army, to get her back. The war lasted for 10 years. In single combat, the greatest Greek warrior, Achilles, killed the Trojan leader Hector. In the end the Greeks won, by a clever trick using a wooden horse.

**The Wooden Horse**

The Wooden Horse was the trick the Greeks used to capture Troy. First they pretended to sail away, but left behind a giant wooden horse. Inside the horse, Greek soldiers were hiding. Rejoicing that the Greeks had gone, the Trojans dragged the horse into their city. They thought it was a gift.

That night the Greek ships returned. While the Trojans were asleep, the hidden Greeks climbed out of the wooden horse. They opened the city gates, and let in the Greek army. Troy was destroyed. The Trojan War was over.

# ERASERS



The famous scientist Sir Joseph Priestley discovered the use of erasers to remove pencil marks from paper in 1770. That same year, a British engineer Edward Naime created the first eraser. He claims to have accidentally picked up a piece of rubber instead of a bread crumb to erase pencil marks from paper. He was astonished to see that the chunk of rubber could actually wipe out pencil marks from paper. However, rubber's properties meant that it wouldn't keep well for long. Just like a perishable such as food, rubber would deteriorate over time. It was not until 1839 when Charles Goodyear discovered the process of vulcanization to treat rubber and make it more usable and long lasting that erasers became better and more widely available. Erasers then became a staple stationery item.

2-in One

How about the pencil with an attached eraser? Hyman Lipman came up with the idea of attaching an eraser to the ends of pencils. A handy creation. Lipman even applied for a patent for the item, but was denied since it just combined two already invented products.

# வாழ்வாதார உதவிக்காக ஏங்கும் பொம்மைவெளி

யாழ்ப்பாணம் - பொம்மை வெளிப்பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த முஸ்லிம் பெண்கள் தமது வாழ்வாதார உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்ந்து 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் வாழ்வதற்கான வீடு உட்பட அடிப்படை வசதிகள்,மின்சார வசதிகள் ஏதுமின்றி வாழ்வதாகவும், மீள் குடியமர்ந்து ஆறு மாத காலமாக வழங்கி வந்த நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்த 330 முஸ்லிம் குடும்பங்களும் பள்ளிவாசலிற்கு சொந்தமான பள்ளக் காணியிலேயே வசித்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த மக்களிற்கு ஒரு பொதுக் கிணறும் இரண்டு மலசலகூடங்களும் மட்டுமே காணப்படுகின்றன. அத்துடன், குடிப்பதற்கான நீர் குழாய் மூலம் கிடைப்பதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப்பிரதேசத்தில் உள்ள காணிகள் பள்ளக் காணிகளாக இருப்பதனால் மழைகாலங்களில் அங்கு மழைநீர் தேங்கி நிற்பதாகவும், இதனால் டெங்கு, மலேரியா போன்ற நுளம்பினால் பரவும் நோய்களும் பரவுவதாகவும், இங்குள்ள குடும்பத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித் தொழிலாளர்களாக இருப்பதாகவும், இதனால் குடும்ப வருமானம் போதாமல் உள்ளதாகவும், கூறும் பெண்கள், தமக்கு ஏதாவது ஒருசுய தொழில் வாய்ப்பினைப் பெற்றுத்தந்தால் குடும்பத்தின் பொருளாதாரச் சுமையினை குறைத்துக் கொள்வதுடன், தமது பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

. மழைகாலங்கள் மற்றும் பண்டிகைக் காலங்களில் கூலி வேலைகளுக்கும் செல்ல முடியாதிருப்பதாகவும், அந்த நேரத்தில் குடும்பத்திலுள்ள குழந்தைகள் கூட பட்டினியுடனே இருப்பதாகவும் குறிப்பிடும் இந்தப் பெண்கள், சுயதொழில் ஒன்றினை மேற்கொள்வதற்கு தமக்கு உதவி புரியுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (சி)

# பேருந்து சிரின்மையால் சிரமப்படும் பயணிகள்



யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரை கேரதீவு வீதியினால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 809 இல்கப் பேருந்து அடிக்கடி பழுதாகுவதனால் இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

யாழிலிருந்து கோயிலாக்கண்டி வரைக்கும் தினமும் 5 தடவைகள் சேவையில் ஈடுபடும் இந்தப் பேருந்து மாலையில் மறவன்புலோ, தனங்களப்பு ஊடாக சாவகச்சேரிக்கு செல்கின்றது. மறு நாட்காலை 7.00 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து புறப்பட்டு தனது வழமையான சேவையினை வழங்குகின்றது.

எனினும், இந்தப் பேருந்து அடிக்கடி பழுதுபட்டுப் போவதினால் பழுதடைந்த பேருந்திற்குப் பதிலாக யாழ்ப்பாணத்திலிருந்து கோயிலாக் கண்டி சந்தி வரையுமே வேறு பேருந்து விடப்படுகின்றது. இதனால், தாம் 2 கி.மீ தூரம் நடந்து வந்தே தமது பயணத்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், சில வேளைகளில் தாம் வருமுன்னர் பேருந்து சென்றுவிடும் எனவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பல முறை கோரிக்கை விடுத்தும் தமக்கு சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 809 வழி இலக்கப் பேருந்தில் பயணம் செய்யும் பயணிகளில் அநேகமானோர் பருவகாலச் சீட்டினையே பயன்படுத்துவதாகவும், பேருந்துப் பயணம் சீரின்மையால் தாம் தனியார் பேருந்துக்கு மேலதிகமாக 40 ரூபா வரையில் செலுத்தியே பயணத்தினை மேற்கொள்வதாகவும் இந்தப் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (சி)

## – மீள்குடியமர்த்தப்பட்டு மூன்று வருடங்கள் –

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் பிரான்பற்றுக் கிராம மக்கள்

மீள்குடியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரையில் தமது வாழ்வாதாரத்திற்கான எந்தவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என பண்டத்தரிப்பு பிரான்பற்று ஜே/147 கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புலிகள் மற்றும் இராணுவத்தின ருக்கிடையில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளிலும், முகாம்களிலும் வசித்துவந்த பிரான்பற்றைச் சேர்ந்த 72 குடும்பங்கள், 2009ஆண்டு மீண்டும் தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இந்த 72 குடும்பங்களில் ஒரு சில குடும்பங்களுக்கு மட்டுமே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனததால் கூடாரங்கள் அமைப்பதற்கான தகரங்கள், வாழ்வாதாரத் தேவைக்கான ஆடு, கோழி என்பன வழங்கப்பட்டுள்ளதுடன், ஒரு குடும்பத்திற்கு மட்டும் இராணுவத்தினர் வீடமைத்துக் கொடுத்துள்ளனர் என இந்தப் பிரதேசத்தினுடைய சமாதான நீதவான் குறிப்பிட்டார்.


ஏனைய குடும்பங்கள் இரவல் வீடுகளிலும் தமது உறவினர்கள் வீடுகளிலும் அடிப்படை வசதிகள், தொழில் வாய்ப்பற்ற நிலையில் தங்கியிருப்பதாகவும், இதில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களும் அடங்குவதாகவும் கூறினார்.

எந்தவிதமான அடிப்படைவசதிகளும் இல்லாத காரணத்தால் ஐந்து குடும்பங்கள் மீண்டும் வன்னி மாவட்டத்திற்கே சென்றுவிட்டன.

இதேவேளை, கூலி வேலை செய்தே அன்றாடத் தேவைகளை ஓரளவு பூர்திசெய்யும் எமக்கு தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் விலையேற்றம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மீள்குடியேறிய ஒருவர் குறிப்பிட்டார்.

எனவே தமது நிலைமைகளை கருத்திற் கொண்டு தமக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் தொழில் வாய்ப்புகளையும் அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனங்களோ ஏற்படுத்தித் தரவேண்டும் என மீள்குடியமர்த்தப் பட்ட பண்டத்தரிப்பு- பிரான்பற்றுக் கிராம மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(சி)



# பதிவிருக்கப் பெட்டகம்

சகஜீவன்களிடம் நாம் கொள்ளும் அன்பு. இதுதான் சகல விஷயங்களுக்கும் ஊற்றுக்கண். – **அசோகமித்திரன்**

பிறவற்றின் துயருக்காக தம்மைப் பலியிட்டுக் கொள்ளும் வினையே பெருந் திரளைப் பின்தொடர வைப்பது. அது இயேசுவாக இருந்தாலும், காந்தியாக இருந்தாலும், சேகுவேராவாக இருந்தாலும்! – **பிரேம் ரமேஷ்**

பகைமையை முடிவுக்கு கொண்டுவருவதுதான் அகிம்சையின் சாரமே அன்றி, பகையாளிகளை அழிப்பதல்ல.
– **காந்தி**

வன்முறை நிறைந்திருப்பது சூழலில் அல்ல; நம் மனங்களில். நம்முள்ளே வன்முறையுணர்வு எப்போதுமிருக்கிறது. அதை அவதானித்து விலக்கியபடி இருத்தலும், அதற்குப் பதிலாக நம்மிடமிருக்கும் கருணையுணர்வைத் தேடி அதைப் பொங்க விடுவதுமே உலக அமைதிக்கு வழி.
– **ஜே.கே.**

வாழ்வு என்ன கருத்தியலின் கட்டுமானங்களுக்கு உட்பட்டா இயங்குகிறது? வாழ்வின் புதிர்த்தன்மையினை எந்தக் கருத்தியலாவது விளக்கிவிடுமா? நாட்டுப்புறக் கதைகள் மற்றும் குழந்தைகள் கதைகளில் கருத்தியலுக்காகக் கதை சொல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களில்லை; புதிரை உடைத்து சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. கதைகள் கதைகளாகவே அவற்றின் அழகுடன் இருக்கின்றன. விளையாட்டுகளுக்கு என்று ஒரு கட்டுக்கோப்பு (integrity) இருப்பது போல, அறக் கருத்தாக்கங்களுக்கு என்று தன்னளவிலான கட்டுக்கோப்பு இருப்பது போல, கதைகளுக்கும் என்று தன்னளவில் முழுமையான கட்டுக்கோப்புகள் இருக்கின்றன என்பதை குழந்தைகளுக்கான எல்லா வகைக் கதைகளும் மீண்டும் மீண்டும் சொல்கின்றன.

கதைகள், விளையாட்டுக்கள் வழி குழந்தைகளின் உலகம் மேல் எனக்குக் கவிந்திருந்த ரொமாண்டிஸிச கற்பிதங்களை முழுமையாக உடைத்தது வில்லியம் கோல்டிங்கின் "Lord of the Flies" நாவல். பாடமாக வைக்கப்பட்டிருந்த இந்த நாவலை கல்லூரி நாட்களில் நான் முழுமையாக வெறுத்தேன். விமான விபத்தில் தப்பி தனியே தீவில் விடப்படும் சிறார்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்க முயலும்போது வளர்ந்தவர்களின் உலகைப் போன்ற வன்முறை மிக்க, சடங்குகள் நிரம்பிய, அதிகாரப் படிநிலைகள் உள்ளார்ந்த சிறு சமூகத்தை உருவாக்குவது கதை. நாவல் மறைமுகமாக முன்வைக்கும் மனிதனின் "இயற்கையான இயல்பு" வன்முறையானது என்பதைப் பற்றி எனக்கு ஐயங்கள் இருந்துகொண்டே இருக்கின்றன.

குழந்தைகளின் விளையாட்டுகளிலும், கதை கேட்டல்களிலும் பங்கேற்கும்போது "இயல்பான இயற்கையான வன்முறை" தாண்டிய அல்லது அதை மறுத்த கட்டுக்கோப்பொன்றின் தற்காலிக நியதியே மேலாதிக்கம் பெறுவதை கவனித்திருக்கிறேன். – **எம்.டி.முத்துக்குமாரசாமி**

பயங்கரவாதிகள் வெறும் பொழுதுபோக்குக்காகப் பயங்கரவாதிகளாவதில்லை. ஆகவே அவர்கள் என்னைப் பயப்பட வைத்ததில்லை. ஆனால் சிலரது எழுத்துக்குண்டுகள் அவை உருவாகும் முன்னே என்னை அச்சுறுத்துகின்றன. அவற்றை ஏற்றுச் செயலிழக்க வைக்கும் சக்தி எனக்கில்லை. – **கவிதாசரண்**

வன்முறைக்கு நம்மை மாற்றும் சக்தி உண்டு. அது நம் எதிரிகளைப் போன்றவர்களாக நம்மையும் ஆக்குகிறது. அது வெற்றியல்ல; பெரும் தோல்வி. – **பி.தொ.நி.கு.**

நான் வெகு அடக்கமாகவே இருக்கிறேன் என்ற எண்ணத்தைக் காட்டிலும் வேரூன்றிய அகந்தைக்கு வேறு அத்தாட்சி கிடையாது. – **லோ**

சுற்றிலும் மோசமான ஒரு சூழலில் ஒருவர் தன்னை மட்டும் புனிதப்படுத்துவாரெனில் அதனை சந்தேகிக்க வேண்டும். – **பிரபஞ்சன்**

எனது நம்பிக்கைக்காக நான் உயிரை விட்டுவிட மாட்டேன். எனது நம்பிக்கை தப்பாகவும் இருக்கலாமல்லவா?
– **ரஸ்ஸல்**

மனிதன் கோரமானவன்; எனில், மானுடம் அழகானது. – **ஹொரேஸ் மார்த்தி**

தன் விடுதலை இன்பம்; பிறர் விடுதலை பேரின்பம்! இதை எட்ட, இன்னும் எத்தனை கோடி உயிரைக் கொல்ல வேண்டும்? – **பிரேம் ரமேஷ்**

# இராணுவ நில ஒதுக்கீடு; சர்ச்சையில் ஜனாதிபதி



(புதுடில்லி)

ஜனாதிபதி பிரதிபா பாட்டிலின் வெளிநாட்டு சுற்றுப் பயணச் செலவிற்காக 205 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மிகுந்த சர்ச்சையை எழுப்பிக் கொண்டிருக்கும் போதே, புனேவில் ஜனாதிபதிக்கு 5 ஏக்கர் இராணுவ நிலம் ஒதுக்கப்பட்டு இருப்பது சர்ச்சையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம் ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணச் செலவு ரூபா 205 கோடி என தகவல் தெரிய வந்துள்ளது. ஜனாதிபதி பிரதிபா பாட்டில் எதிர்வரும் ஜூலை மாதம் ஓய்வு பெறுகிறார். ஓய்வு பெற்ற பிறகு அவர் வசிப்பதற்காக, மகாராஷ்டிர மாநிலம் புனேவில் அவருக்கு 5 ஏக்கர் இராணுவ நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜஸ்டிஸ் பார் ஜவான் என்ற தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ அதிகாரி சுரேஷ் பட்டீல் தெரிவித்த தாவது, ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட 5 ஏக்கர் நிலத்துக்கும் வேலி போடப்பட்டுள்ளது.

மேலும் அந்த நிலத்தில் இருந்த வெள்ளையர் கால இரண்டு கட்டடங்களை இடித்து விட்டு, ஜனாதிபதிக்காக புதிய வீடு கட்டி வருகிறார்கள். 4,500 சதுர அடி பரப்புள்ள வீடு கட்டப்பட்டு வருகிறது.

இந்த வீட்டுக்காக, 5 ஏக்கர் நிலத்துக்கும் வேலி எழுப்பியது ஏன்? என தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 இன்படி, இராணுவ உயர் அதிகாரிக்கு கடிதம் எழுதினேன். ஆனால் இது வரைக்கும் பதில் வரவில்லை எனத் தெரிவித்தார்.

# குஜராத்தில் நிலநடுக்கம்


(ஆமதாபாத்)

குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. மும்பை, சோலாபூர், கோலாப்பூர், நவிமும்பை மற்றும் புனே உட்பட முக்கிய நகரங்கள் அதிர்ந்தன. முதலில் குஜராத்தில் நில நடுக்கம் 4 ரிக்டர் அளவாக இருந்ததால் பெரும் அளவில் பாதிப்பு இருக்காது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த புதன்கிழமை இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் சுனாமி எச்சரிக்கை நாடு முழுவதும் பதட்டத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக கடலோரம் மற்றும் தென் கிழக்கு ஆசிய பகுதிகள் மிரண்டு போயின. இந்நிலையில் இந்தியாவின் மேற்கு பகுதியில் இன்று காலையில் நிலநடுக்கம், நில அதிர்வு அப்பகுதி மக்களை பீதியில் ஆழ்த்தியது.

குஜராத்தில் கட்ச் பகுதியில் ரிக்டர் அளவு 4 ஆகவும், மும்பை மற்றும் சதாராவில் 4.9 ஆகவும் பதிவாகியிருக்கிறது. நில அதிர்வை உணர்ந்த மக்கள் அனைவரும் கட்டடங்களை விட்டு வெளியேறினர்.

கர்நாடகாவிலும் நில அதிர்வு: கர்நாடக மாநிலம் பெல்காம் பகுதியிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




# குழந்தையைக் கொன்ற தந்தைமீது தாக்க முயற்சி

(பெங்களூர்)

கொடூரமாகத் தாக்கியதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த 3 மாதக் குழந்தையைக் கொன்ற தந்தை உமர் பருக்கை, பெங்களூர் மத்திய சிறையில் இருக்கும் ஏனைய கைதிகள் தாக்க முயற்சித்துள்ளனர்.

அவனுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று கோஷமெழுப்பி இவர்கள் தாக்க முற்பட்டுள்ளனர். காவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு குழந்தையைக் கொன்ற கைதியை தனிச் சிறையில் போட்டுள்ளனர்.




# இராணுவத் தளபதியிடம் சி.பி.ஐ. விளக்கம்



(புதுடில்லி)

இராணுவத்துக்கு தரம் குறைந்த வாகனங்களை வாங்குவதற்காக ரூபா14 கோடி இலஞ்சம் கொடுக்க முயன்றதாகக் கூறப்பட்ட வழக்கில் இராணுவ தலைமைத் தளபதி வி.கே.சிங் கிடம் விளக்கம் கேட்க சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது.

கடந்த சில நாட்களாக தொடர பிரச்சினைகளில் சிக்கி பல்வேறு விவாதங்களுக்கு ஆளானார் இராணுவ தலைமைத் தளபதி வி.கே.சிங். இந்நிலையில், தமக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக வி.கே.சிங் வெளியிட்ட தகவலால் நாடு முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து, சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. சி.பி.ஐ.க்கும் எழுத்துபூர்வமாக வி.கே.சிங் புகார் மனுவும் கொடுத்துள்ளார். இந்நிலையில் வி.கே.சிங்கிடம் கூடுதல் விளக்கம் கேட்க சி.பி.ஐ. முடிவு செய்துள்ளது. இந்த புகார் குறித்த சரியான விளக்கம் கோர, வி.கே.சிங்குக்கு சரியான ஒரு நாளை அறிவிக்கவும் சி.பி.ஐ. திட்டமிட்டிருக்கிறது. ஆனால் தலைநகரில் வி.கே.சிங் இல்லாத நிலையில் அவரை சி.பி.ஐ.யால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று கூறப்படுகிறது. விரைவில் வி.கே.சிங்கிடம் சி.பி.ஐ. விளக்கம் பெறுக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வரி செலுத்தியவர்களில் ஷாருக், சல்மான் முன்னிலை



கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் (2011-12) பொலிவுட் நடிகர்கள் பலர் அதிக அளவில் வருமான வரி செலுத்தியுள்ளனர். இவர்களில் ஷாருக் கான் மற்றும் சல்மான் கான் ஆகிய இருவரும் தலா ரூ.15 கோடி வரி செலுத்தி முன்னிலையில் உள்ளனர்.

ஷாருக் கான் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு 20 சதவீதம் குறைவாக வரி கட்டி இருக்கிறார். அதே சமயத்தில் சல்மான் கான் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு 20 சதவீதம் கூடுதல் வரி செலுத்தியுள்ளார். கடந்த ஆண்டு 2 படங்களில் நடித்த ஷாருக் ஒவ்வொரு படத்துக்கும் ரூபா 30 கோடி முதல் ரூபா35 கோடி வரை சம்பளம் வாங்கினார்.

2011-12 இல் நடிகர் அமிதாப் பச்சன் ரூபா 7 கோடி வரி செலுத்தி இருக்கிறார். எனினும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 10 சதவீதம் வரி குறைவாகவே கட்டி இருக்கிறார். அமிதாப் பச்சன் வருமானத்தின் பெரும் பகுதி கோன் பனேகா குரோர்பதி என்ற நிகழ்ச்சி மூலமாகவே அவருக்கு கிடைத்தது. நடிகர் சைப் அலிகான் மற்றும் ரன்பீர் கபூர் ஆகியோர் இந்த ஆண்டு தலா ரூபா 7 கோடி வரி செலுத்தி உள்ளனர்.

# ஏனைய மாநில என்கவுண்டர்களையும் விசாரிக்கக் கோரும் மோடியின் அரசு

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் போலி என்கவுண்டர்களைக் குறித்து விசாரிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது நரேந்திர மோடி அரசு. இந்த மனுவை ஏற்று அனைத்து மாநில அரசுகளுக்கும் அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது உச்சநீதிமன்றம். இதுதொடர் பாக குஜராத் அரசு தாக்கல் செய்த மனுவில், பொலிஸாரால் செய்யப்படும் என்கவுண் டரை நாடு முழுவதும் உள்ள பல்வேறு குழுக்கள் கண்கா ணித்து வருகின்றன. ஆனால் குஜராத் மாநிலத்தை மட்டும் கூடுதலாக கண்காணித்து அம்மாநில பொலிஸை தாக்கு கின்றனர். போலி என்கவுன் டர்கள் நாடு முழுவதும் நடப்ப தால் அவை அனைத்தையும் விசாரிக்க ஒரே முறையை பின்பற்ற வேண்டும். இதற்கென தனிக் கொள்கைகளை வகுத்து தனி அமைப்பை ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.


இதனையடுத்து, இந்த மனுவை நீதிபதிகள் அப்தாப் ஆலம் மற்றும் ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஆகியோரை கொண்ட பெஞ்ச் ஏற்றுக்கொண்டது. மேலும் இதுகுறித்து



பதிலளிக் குமாறு தேசிய மனித உரிமை ஆணையம், மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளுக் கும் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பவும் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சிக்காலத்தில் நடந்த பல்வேறு போலி என்கவுண்டர் களில் பலர் கொலையாகியுள்ள னர். இதில் இஷ்ரத் ஜெகான், சோராபுதீன் ஷேக் ஆகியோரின் கொலைகள் குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து சி.பி.ஜ மற்றும் உச்சநீதிமன்றம் அமைத்த சிறப்பு புலனாய்வுப் படைகள் விசாரித்து வருகின்றன. மேலும் இந்த வழக்குகளை உச்சநீதி மன்றமே நேரில் கண்காணித்தும் வருகிறது. இந்நிலையில், மற்ற மாநிலங்கள் மீது குஜராத் மாநி லம் குற்றம் சாட்டுவது அம்மா நில பொலிஸார் மீது இருக்கும் வழக்கை திசைதிருப்பும் விதமாக அமைந்துள்ளது என தெரிகிறது.




# ஆளில்லா விமானத் தாக்குதலை அமெரிக்கா நிறுத்த வேண்டும் - பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவுடனான உறவை புதுப்பிப்பதற்கான புதிய விதிமுறைகளுக்கு பாகிஸ்தான் நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது. ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் நடத்தப்படும் தாககுதலை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தலைமையிலான நேட்டோ படையினர் பாகிஸ்தான எல்லையில் பதுங்கி உள்ள தீவிரவாதிகளை குறி வைத்து ஆளில்லாத உளவு விமானங்கள் மூலம் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்நிலையில், கடந்த நவம்பரில் நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் வீரர்கள் பரிதாபமாக இறந்தனர். இதனால் பாகிஸ்தான் , அமெரிக்கா உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து, நேட்டோ படைகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் வழியை பாகிஸ்தான் மூடியது. மேலும் அமெரிக்காவுடனான உறவு தொடர்பாக புதிய விதிமுறைகளை வகுக்க நாடாளுமன்றம் முடிவு செய்தது. இதற்கிடையே, இருதரப்பு உறவைப் புதுப்பிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், பாகிஸ்தான் பாதுகாப்பு விவகாரங்களுக்கான நாடாளுமன்ற குழு அளித்திருந்த 14 பரிந்துரைகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஆலோசனை நடத்தப்பட்டது. சில திருத்தங்களுடன் புதிய விதிமுறைக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது.

அமெரிக்காவுடன் மீண்டும் உறவை தொடரவும், நேட்டோ படையினருக்கு பொருட்கள் எடுத்துச் செல்வதற்கான வழியை திறந்து விடவும் புதிய விதிமுறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் மீது, அத்துமீறி தாக்குதல் நடத்துவதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அதில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலந்த் கூறுகையில், பாகிஸ்தான் முடிவை வரவேற்கிறோம். இருதரப்பு உறவை தொடர்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். அதேநேரம், ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்படுத்தும் முயற்சிக்கும் பாகிஸ்தான் ஆதரவும் அளிக்க வேண்டும். என்றார்.

உலகச் செய்திகள்

# வடகொரிய ஏவுகணைத் திட்டம்; ஜி -8 நாடுகள் கண்டனம்




வட கொரியா நீண்ட தூர ஏவுகணையை ஏவியமைக்கு ஜி எட்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் தங்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானங்களை மீறும் வகையில் வட கொரியா செயற்பட்டுள்ளதாக குறித்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்த ஏவுகணைத் திட்டம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஜி எட்டு நாடுகள் குறிப்பிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டது.

எதிர்காலத்தில் தடைசெய்யப்பட்ட ஏவுகணைத் தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டாம் என வட கொரியாவை வலியுறுத்தியுள்ள ஜி எட்டு நாடுகள், கொரிய தீபகற்பத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும் கூறியுள்ளன.

சர்வதேச ரீதியான கண்டனங்களுக்கு மத்தியில் வட கொரியா செயற்படுத்திய ஏவுகணைத் திட்டம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# கினியா பிஸ்ஸாவில் இராணுவப்புரட்சி; ஜனாதிபதி, பிரதமரின் பதவி பறிப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா-பிஸ்ஸாவில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதாகவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறை பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

கினியா-பிஸ்ஸாவ் ஜனாதிபதியாக றெய்மன்டோ பெரேரா, பிரதமராக கார்லோஸ் கோம்ஸ் ஜூனியர் ஆகியோர் பதவியில் இருந்தனர்.

இந்நிலையில் அந்த நாட்டில் திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது. இதனால் தற்போதைய ஜனாதிபதியாக உள்ள றெய்மன்டோ பெரேரா, இராணுவ அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

அதே போன்று பிரதமர் கார்லோஸ் கோம்ஸ், அவரது உதவியாளர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு இரகசிய இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.


இதற்கு முன்பு, கினியா- பிஸ்ஸாவின் அண்டை நாடான அங்கோலாவில் இராணுவ வீரர்கள் 200இற்கும் மேற்பட்டோர் தலைநகரைப் பிடித்தனர். இவர்கள் கினியா-பிஸ்ஸாவ் இராணுவத்திற்கு துணையாக இந்த நடவடிக்கையில் இறங்கினர்.

கடந்த 1974ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்ட ஆரிக்க நாடுகளில் சிறிய நாடான கினியா-பிஸ்ஸாவ், 1.6 மக்கள் தொகையைக் கொண்டது.

வரும் 29ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நாட்டினை இராணுவம் கைப்பற்றியுள்ளது.

இது குறித்து இராணுவச் செயதித் தொடர்பாளர் தபா நௌவானியா கூறுகையில், கைது செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நலமுடன் உள்ளனர். இராணுவப்புரட்சியால் உயிரிழப்புகள் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் பச்சிளம் குழந்தைகள் 70,000 பேருக்கு எச்.ஐ.வி.பாதிப்பு




எண்ணெய் வளம் மிக்க நைஜீரியாவில் புதிதாக பிறந்த 70,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் எச்.ஐ.வி.நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்நாட்டில் சமீபத்தில் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம் நடத்திய ஆய்வில் தென்கிழக்கு மாகாணங்களான ஒகூன், ஈடோகோ ஆகிய பகுதிகளில் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி பாதிப்பு இருந்துள்ளது. அதுமட்டுமின்றி கர்ப்பமான பெண்கள் சிலரைப் பரிசோதித்ததில் அவர்களுக்கும் எச்.ஐ.வி பாதிப்புகள் பெருமளவு இருந்துள்ளன.

இதைத்தொடர்ந்து அப்பகுதிகளில் கடந்த சிலமாதங்களாக ஆய்வுகளை மேற்கொண்டதில் 70 ஆயிரத்திற்கும் அதிகமான பிறந்த குழந்தைகளுக்கும் எச்.ஐ.வி பாதிப்பு உள்ளதாக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இவற்றை தவிர போதிய மருத்து வசதியின்றி பெண்கள், குழந்தைகளுக்கு காசநோய், மலேரியா உள்ளிட்ட நோய்களால் அதிகளவு பாதிக்கப்பட்டு இருந்ததும் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையத்தின் பொது இயக்குனர்(என்ஏசிஏ) ஜான் இடோகோ கூறியதாவது; தாய் வழியாக எச்.ஐ.வி நோய்க்கு ஆளான குழந்தைகள் நிலவரம் குறித்து புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. அதில் எச்.ஐ.வி.யால் 70,000 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து எச்.ஐ.வி, எய்ட்ஸ், எலும்புருக்கி, மலேரியா போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் தாக்கிய பெண்களிடம் இருந்து பிறக்கப் போகும் குழந்தைகளுக்கு இந் நோய்கள் பரவுவதை குறைக்க கடும் முயற்சி எடுத்து வருகிறோம்.

அதற்காக அரசு மற்றும் பல்வேறு தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட தயாராக உள்ளோம். மேலும் நோய்த் தாக்குதலை தடுத்து நாட்டு மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான அனைத்து விதமான முயற்சிகளையும் என்.ஏ.சி.ஏ மேற்கொள்கிறது என்றார்.

# சவுதிக்கு செல்கிறது பின்லேடனின் குடும்பம்

சட்டவிரோதமாக பாகிஸ்தானுக்குள் நுழைந்ததாக ஒசாமா பின்லேடனின் மனைவிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, தற்போது அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒசாமாவின் 3 மனைவிகள் மற்றும் அவரது குழந்தைகளின் காவல் நாளை மறுதினம் முடிவடைகிறது.

இதனையடுத்து இவர்கள் அனைவரும் சவுதிக்கு அனுப்பப்படுவார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# டேவிட் கமரூன் - சூகி சந்திப்பு




- மியான்மர் சென்றிருந்த இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன், அந்நாட்டின் எதிர்க் கட்சி தலைவரான ஆங் சாங் சூகியை சந்தித்து பேசினார்.

அண்மையில் மியான்மரில் நடந்த 45 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக கட்சி 43 இடங்களை கைப்பற்றி அபார வெற்றி பெற்றது. இதனையடுத்து அந்நாட்டில் ஜனநாயகம் மலரும் சூழல் உருவாகி உள்ளது. இந்நிலையில் மியான்மர் சென்றிருந்த இங்கிலாந்து பிரதமர், சூகியை சந்தித்து பேசினார்.

இங்கிலாந்து பிரதமர் மியான்மர் சென்றது இதுவே முதன் முறையாகும். இதற்கு முன்னதாக அந்நாட்டு ஜனாதிபதி தீன் செயினை சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

# சிரியா போர் நிறுத்தம்; இந்தியா வரவேற்பு



சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் - ஆசாதுக்கு எதிராக, கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் 10 ஆயிரம் பேர் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இந்தக் கலவரத்தை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. சபை தீவிர முயற்சி மேற்கொண்டது.

கோபி அனானை சமாதான தூதுவராக அனுப்பி, சிரியா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வைத்தது.

அதன் பலனாக அங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் தற்போது சிரியாவில் அமைதி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தப் போர்நிறுத்தத்திற்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது. கோபி அனான் தலைமையிலான குழு, சிரியாவில் அமைதியைக் கொண்டு வர மேலும் பல சிறப்பான செயற்பாடுகளைச் செயயும் என இந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# இந்தியத் தேயிலைகள் தரமானது; பாகிஸ்தான் தெரிவிப்பு



தென் இந்தியாவிலிருந்து சுமார் 24 மில்லியன் கிலோ அளவிற்கு தேயிலைத்தூளை பாகிஸ்தான் இறக்குமதி செய்து வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் பத்திரிக்கையாளர் முகமது ஹனிப் தலைமையில் குழு ஒன்று, இந்தியாவில் உள்ள தேயிலைத்தூள் உற்பத்தியாளர்கள், விற்பனை செய்பவர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் கலந்தாலோசித்தது.

இந்த ஆலோசனக்குப் பின்னர் முகமது ஹனிப், தென் இந்தியாவில் இருந்து பெறப்படும் தேயிலைத்தூள் தரமாக இருப்பதாகவும், பாகிஸ்தான் மக்கள் இத்தரம் குறித்து மகிழ்ச்சி தெரிவிப்பதாகவும், ஆனால் சில நேரங்களில் தரம் குறைந்த தேயிலைத் தூளை அனுப்பிவிடுவதாகவும் தெரிவித்தார்.

தற்போது பாகிஸ்தானின் மொத்த தேயிலைத்தூள் இறக்குமதியில், 11 சதவீதம் தென் இந்தியாவிலிருந்து பெறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நந்தன வருட இராசி பலன்கள்

## தனுசு



மூலம், பூராடம், உத்ராடம், 1ஆம் பாதம் வரை

(பெயரின் முதல் எழுத்துக்கள்: யே, யோ, ப, பி, பு, பூ, பா, ன, டே உள்ளவர்களுக்கும்) பாம்பு கிரக பெயர்ச்சிக்குப் பிறகு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறும்!

வாதம் செய்வதில் திறமைசாலிகளாக இருந்தாலும், வாய்ப்புகள் வரும் பொழுது, சாமர்த்தியமாக அதை உபயோகப்படுத்திக் கொள்ளும் தனுசு ராசி நேயர்களே!

'கர' வருடம் முடிந்து 'நந்தன' வருடம் தொடங்குகிறது. வருடத் தொடக்கமே உங்கள் ராசியில்தான் தொடங்குகிறது. அதுமட்டுமல்ல, குரு உங்கள் ராசியைப் பார்த்து, தொடங்கும் இந்தாண்டு, குதூகலம் தரும் ஆண்டாகவே அமையப்போகிறது.

சனி பத்தில் சஞ்சரித்து, தொழில் வளர்ச்சியை மேலோங்கச் செய்யப் போகிறார். தொழில் மாற்றச்சிந்தனைகள் அதிகரிக்கும்.

சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் மட்டும் எதிரிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. வீண் பழிகளையும், வேற்று மனிதர்களால் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடலாம்.

இருப்பினும், குரு பலம் உங்களுக்கு கூடுதலாக இருப்பதால், தெய்வ தரிசனங்களும், சிறப்பு பரிகாரங்களும் வையகத்தில் வரும் துயரங்களைப் போக்கும். மனக்கவலையை மாற்றும்.

சர்ப்ப சாந்திப் பரிகாரங்களும், சண்முகநாதர் வழிபாடும், வைரவர் வழிபாடும், நந்தீஸ்வரர் வழிபாடும் உங்களுக்கு நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் எதிரிகள் விலகுவர். மறைமுக எதிர்ப்புகளுக்குப் பரிகாரமாக திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபாடு செய்யுங்கள்.

தெய்வ பக்தியும், தேச பக்தியும் மிக்கவர்கள் நீங்கள்! நாணயம், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக விளங்குவீர்கள். ஆலோசனை சொல்வதில் கைதேர்ந்தவர்களாக இருப்பீர்கள். சகல கலைகளையும் அறிந்திருந்தாலும் பார்ப்பதற்கு சாந்த சொரூபியாகத் தோற்றமளிப்பீர்கள்.

தேசபக்தியும் உங்களிடம் உண்டு. தெய்வபக்தியும் உங்களிடம் உண்டு. ஆசைப்பட்டதை அடையாவிட்டால் கோபம் உடனே வந்துவிடும். ரகசியங்களைக் காப்பாற்றுவதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த நந்தனப் புத்தாண்டு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு உங்கள் ராசியைப் பார்க்கிறார். எனவே குருச்சந்திர யோகம் செயல்படுகிறது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். பூமி சேர்க்கை அதிகரிக்கும்.

பாம்பு கிரகங்களின் ஆதிக்கத்தின்படி பயணங்கள் அதிகமாகும். பொதுவாக நண்பர்களின் நல் ஆதரவோடு முன்னேற்றம் காணும் நேரமிது.

**சகட யோகம் தரும் குருபெயர்ச்சி**

நவக்கிரகங்களில் நல்ல பலனைக் கொடுப்பவர் குரு என்று சொல்வார்கள். அவர் உங்கள் ராசியைப் பொறுத்தவரை ராசிநாதனாகவும், 4இற்கு அதிபதியாகவும் விளங்குகிறார். அவர் வைகாசி மாதம் 6ஆம் திகதி பெயர்ச்சியாகி சகடயோகத்தை வழங்கப் போகிறார்.

எனவே ஒரு தொகை செலவழிந்த பிறகு அடுத்த தொகை வந்து சேரும். ராசிநாதன் 6இல் சஞ்சரிக்கும் பொழுது இடமாற்றம், ஊர் மாற்றம், பதவி வாய்ப்புகள், புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

'தேவ குரு 6இல் வந்தால் தேவைகள் பூர்த்தியாகும்' என்பார்கள். ஆவல்கள் தீரவேண்டின் அனுசரிப்பும் உங்களுக்குத்தேவை. 4இற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் பெற்றோர் வழிப் பகைகளும் உருவாகலாம். சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமாக இது அமையும்.

6இல் சஞ்சரிக்கும் குருவிற்கு பரிகாரமாக வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு, இல்லத்திலும் குரு கவசம்பாடி, குரு வழிபாடு செய்யலாம். சுய ஜாதகத்தில் வியாழ திசை, வியாழ புத்தி நடப்பவர்கள், ரிஷபம் அல்லது துலாம் ராசியில் குரு இருப்பவர்கள் திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. குருவின் அருட்பார்வை உங்கள் ராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

அதன் பார்வை பலத்தால் குடும்ப ஸ்தானம் பலப்படுகிறது. எனவே திருமணத்தடை அகலும். தித்திக்கும் வாழ்க்கை அமையும். வருமானப் பெருக்கம் ஏற்படும். வசதி வாய்ப்புகள் பெருகும். தொழில் ஸ்தானம் புனித மடைவதால், தொழில்வளம் மேலோங்கும். குருவின் பார்வை சாதாரண மனிதர்களைக் கூட சக்கரவர்த்தியாக மாற்றி விடும். அரியணை ஏறும் யோகம் முதல அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ளும் யோகம் வரை அனைத்தையும் கொடுப்பது குருவின் கையில்தான் இருக்கிறது. எனவே உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் பயணங்களால் பலன்களும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**செவ்வாய்-சனி சேர்க்கை காலம்!**

ஆனி 9ஆம் திகதி முதல் ஆடி 29ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு பத்தாமிடத்தில் செவ்வாயும் சனியும் ஒன்று கூடுகிறார்கள். இக்காலத்தில் திடீர் திருப்பங்கள் பலவும் ஏற்படும். தொழிலில் இருப்பவர்களுக்குத் தொழில் மாற்றம், உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உத்தியோக மாற்றம், பதவியில இருப்பவர்களுக்குப் பதவி மாற்றம் ஆகியவை ஏற்படலாம்.

பிள்ளைகளால் பிரச்சினைகளைச் சந்திக்கின்ற நேரமிது. மனக்குழப்பங்கள் ஏற்படும் பொழுதெல்லாம் அருகில் இருக்கும் ஆன்மீகப் பெரியவர்கள், சான்றோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**துயரங்களைப் போக்குமா துலாம் ராசிச்சனி!**

ஆவணி 27ஆம் திகதி உங்கள் ராசிக்கு பதினோராமிடமான லாப ஸ்தானத்தில் சனி உச்சம் பெறப் போகிறார். இது மிகுந்த யோகம் தரும் நேரமாகும். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்பு கிட்டும்.

**வக்ர குரு வளர்ச்சியைக் கொடுக்குமா?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24ஆம் திகதி வரை ரிஷபத்தில் குரு வக்ரம் பெறுகிறார். இக்காலம் உங்களுக்கு ஓர் பொற்காலமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். விழிப்புணர்ச்சி இல்லாமல் செயல பட்டால் கூட விரும்பும் நல்ல தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். அரசியல் துறையில் ஈடுபட்டவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். எதிரிகள் விலகி சரணடைவர்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஊதிய உயர்வோடு இடமாற்றம் காண்பர். மஞ்சள் ஆடை அணிவித்து, முல்லைப் பூமாலை சூட்டி குரு பகவானை வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிட்டும்.

**பாம்புக் கிரகப் பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**


கார்த்திகை 17ஆம் திகதி 11ஆம் இடத்தில் ராகுவும், 5ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ராகு பலத்தால் பொருளாதார நிலை உயரும். போற்றுகிற செல்வாக்கு மேலோங்கும். வீடு கட்டும் வாய்ப்பு முதல், நாடு விட்டு நாடு செல்லும் வாய்ப்பு வரை நடைபெறும்.

5இல் சஞ்சரிக்கும் கேது, பிள்ளைகள் வழியில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். அவர்களின் கல்வி நலன் கருதி எடுத்த செயல் வெற்றி பெறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

இக்காலத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சந்தோஷங்களைச் சந்திக்கலாம்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1ஆம் திகதி ஆனி 6ஆம திகதி வரையிலும் பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் சனி 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் அதன் வக்ர இயக்க காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவைப்படும். பணப்பற்றாக்குறை அதிகரிக்கலாம். எப்படி, எப்படியெல்லாம் தொழிலைப் பெருக்கினால் தொகை வந்து சேரும் என்று சிந்திப்பீர்கள். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்குத் தொல்லைகள் உருவாகலாம். வந்த வரன்கள் வாயிலோடு நின்றுவிடலாம்.



சனி மூன்றாமிடத்திற்கு அதிபதி என்பதால் தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும் என்பது சந்தேகம்தான். ஆவணி மாதத்திற்கு மேல்தான் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். அந்த நேரத்தில் திருநள்ளாறு, பெருச்சிக் கோவில், திருக்கொள்ளிக்காடு போன்ற சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

வியாழக்கிழமை தோறும் குரு தெட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

நந்தன வருடம் தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும் விதத்திலேயே கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. கணவன்-மனைவிக்குள் உறவு அதிகரிக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வைகாசிக்கு மேல் தங்கம், வெள்ளி ஆகியவற்றை வாங்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும்.

சனி, செவ்வாய் சேர்க்கைக் காலத்தில் குழந்தைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். அதன் குணங்களில் மாறுபாடு ஏற்படும் பொழுதெல்லாம், அன்பு செலுத்தித் திருத்துவது நல்லது. வருடக் கடைசியில் வளர்ச்சி அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் அமைக்க குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுப்பர். உத்தியோகத்திலிருக்கும் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். ஊதிய உயர்வும், உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பும் கிட்டும். நந்தன வருடம் நன்மைகளை மேலும் வழங்க குருவின் பாதசார பலமறிந்து, சுயஜாதக ரீதியான பரிகாரங்களை மேற்கொள்வதே நல்லது.

(தொடரும்...)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை எம்.எஸ்.எப். ஒருபோதும் கைவிடாது

யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை கைவிடவில்லை என எம்.எஸ்.எப் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் பணிகளை எம்.எஸ்.எப் தொண்டு நிறுவனம் மேற்கொண்டு வந்தது.

இந்த நிறுவனம் கடந்த 5ஆம் திகதி வடக்கிற்கான தமது சேவையை இடைநிறுத்திக் கொண்டது.

வடக்கில் யுத்தத்தினால் உள நிலை பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படவில்லை எனவும், நீண்டகால அடிப்படையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் எம்.எஸ்.எப் தெரிவித்துள்ளது.

எனவே, நீண்ட கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலன்களை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்திற்கு கிடையாது என எம்.எஸ்.எப் அறிவித்துள்ளது.

இதன் காரணமாகவே இதுவரை காலமும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்த உளநல ஆலோசனை சேவையை இடைநிறுத்தியதாகவும், இது யுத்த வலய பாதிக்கப்பட்ட மக்களை கைவிடுவதாக அர்த்தப்படாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து மூன்றாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் ஆயிரக்கணக்கான மக்கள் உள சார் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதனை மறுப்பதற்கில்லை என எம்.எஸ்.எப் குறிப்பிட்டுள்ளது.

அவசரமாக உதவி தேவைப்படும் மற்றுமொரு பிரதேசத்திற்கு தமது வளங்களை பயன்படுத்த உத்தேசித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஊதியம், ஊதிய அதிகரிப்பு இன்மை பணியிலிருந்து விலகும் ஊழியர்கள்

(வடமராட்சி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி பணியிலிருந்து விலகிச் செல்வதாக தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

குறித்த சங்கத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு பங்குனி மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. மேலும் 2007 ஆம் ஆண்டிலிருந்து சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இதேவேளை இவ்வருட மாசி மாத சுற்றுநிருபத்தின் படியும் வாழ்க்கைப்படி உயர்வு அல்லது சம்பள உயர்வுகளோ வழங்கப்படவில்லை.

தற்போது நிலவுகின்ற பொருட்களின் விலை உயர்வு காரணமாக சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்கள் குடும்ப நிலைமையைக் காரணம் காட்டியும், வேறு ஏதாவது காரணம் காட்டி பணியிலிருந்து விலகிச் செல்கின்றனர்.

இதனால் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழியர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. அந்த ஊழியரின் வெற்றிடத்தில் பதில் கடமையாற்றும் ஊழியர்கள் என்ன செய்வது என்று அறியாமையினால் வேலை செய்து வருகின்றனர்.

இவர்களுக்கான வேலைப் பளுவும் அதிகரித்தே காணப்படுகின்றது எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

மேற்படி ஊழியர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினை தொடர்பாக ஊழியர்கள் அனைவரும் கையெழுத்திட்டு மகஜர் மூலம் இயக்குநர் சபைக்கு அறிவித்தனர்.

அதுமட்டுமல்லாமல் இவ்வருட முதல்பகுதியில் அமைப்பு என்றில்லாமல் சம்பள உயர்வு கோரி கடிதமூலம் எல்லா ஊழியர்களும் கொடுத்திருந்தனர். இதற்கும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்பதுடன், இப்போது பணிபுரியும் ஊழியர்கள் மன விரக்தியுடன் கடமை செய்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து ஊழியரின் நலன்பேண நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறித்த தொழிற்சங்கப் பிரதிநிதி கோரிக்கை விடுத்துள்ளார். (116)

# சென்னையை வீழ்த்தியது புனே வாரியர்ஸ்



(புனே)

சென்னை சுப்பகிங்ஸ் உடனான நேற்றைய போட்டியில் புனே வாரியர்ஸ் 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பகிங்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக பிளசிஸ் 43, ரெய்னா 20, டோனி 26, ஜடேஜா 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்மா 2, டின்டா, மத்தியூஸ், நெஹ்ரா தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய புனே வாரியர்ஸ் அணிக்கு றைடர் இறுதிவரை ஆட்டமிழக்காது சிறப்பாக விளையாட, 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவ்வணி சார்பில் றைடர் 73, ஸ்மித் 44 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மகேஷ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக றைடர் தெரிவானார்.

# கொழும்பு – தூத்துக்குடி கடற்பயணம் ஆர்வம் காட்டாத இந்திய மக்கள்

(சென்னை)

கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையிலான கப்பல் சேவையை பயன்படுத்தி இலங்கைக்கு வருவதற்கு இந்திய மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரியவருகின்றது.

கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்டது. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்த கப்பல் போக்குவரத்து கடந்த வருடம் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது. இந்தநிலையில், கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையே சிறிய பயணிகள் கப்பல் எதிர்வரும் 19 ஆம் திகதி இயக்கப்படும் என தூத்துக்குடி துறைமுக பொறுப்பு கழகம் அறிவித்தது.

கப்பல் இயக்குவதற்கு பிளமிங்கோ லயன்ஸ் என்ற ஷிப்பிங் கார்ப்பரேசன் நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது. ஆனால் இதற்கான முன்னேற்பாடு பணிகள் எதுவும் நடைபெறவில்லை. மேலும் இலங்கைக்கு செல்ல வேண்டுமென்றால் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தில் முன்கூட்டியே விசா பெறவேண்டும் என்ற நிலை கடந்த ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கப்பலில் செல்ல மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகிறது.

சிறிய கப்பல் இயக்கப்படும் என்ற அறிவிப்புக்கு பிறகு இலங்கை செல்ல இதுவரை யாருமே முன்பதிவு செய்யவில்லை. இது துறைமுக நிர்வாகத்துக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக திட்டமிட்டபடி ஏப்ரல் 19 ஆம் திகதி கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையேயான கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதில் தாமதம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அவசியம் என்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல்களை விரைவில் நடத்த அரசாங்கம் ஆர்வம் காட்டி வரும் நிலையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய, கிழக்கு மற்றும் சபரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படும் வரை தேர்தல்கள் பக்கச்சார்பின்றி நடைபெறும் என்பதனை நம்ப முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

## இந்திய....

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகளை எம்.பி.க்கள் சந்தித்துப் பேசுவார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்பாணம், கிளிநொச்சியை அவர்கள் பார்வையிடவுள்ளனர். தமிழர் பகுதிகளில் செய்யப்பட்டுள்ள மறுசீரமைப்பு பணிகள் மற்றும் அங்கு தமிழர்கள் மீண்டும் குடியேற்றப்பட்டுள்ளது பற்றியும் அவர்கள் ஆய்வு நடத்தவுள்ளனர். தமிழர்கள் மற்றும் தமிழர் கட்சி தலைவர்களையும் எம்.பி.க்கள் சந்திக்கவுள்ளனர்.

## ஓமானிடமிருந்து...

கொள்வனவு செய்வது தொடர்பில் அந்நாட்டுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகின்றது.

அதேவேளை, சபுகஸ்கந்தையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஈரானின் எண்ணெயை மட்டுமே சுத்திகரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## குணரட்ணம்...

பிரேம்குமார் குணரட்ணம் கம்பஹா மாவட்டத்தில் தங்கியிருந்த இரு இடங்களில் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னணி சோசலிச கட்சி உறுப்பினர்களை பொலிஸார் அச்சுறுத்தி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கட்சி உறுப்பினர்களுக்கு...

அவர்களிடம் குமார் குணரட்ணம் தொடர்பில் விசாரணைகளை நடத்தியுள்ளதுடன் அவர் இந்த வீடுகளில் வசித்தாரா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி வீடுகளில் விசாரணைகளை நடத்தியோர், தாங்கள் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் கூறியது பொய் என்று நாங்கள் கண்டுபிடித்துவிட்டோம். அவர்களின் நடவடிக்கை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது விடயமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்ததாக தெரிவித்த புபுது ஜயகொட, பொலிஸ் மா அதிபரிடமும் இது குறித்து எழுத்து மூலம் அறிவித்ததாக குறிப்பிட்டார்.

## அதிகாரப் பகிர்வு....

அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலைப்பாட்டை ஏனைய கட்சிகளும் கொண்டிருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தியை ரணில் விக்கிரமசிங்க சந்தித்த போது சோனியா காந்தியின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் இருந்ததாகவும் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் பஸில்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் தொடர்பிலும் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அத்துடன், இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் மத்திய அரசின் முக்கியமான அமைச்சர்கள் சிலரையும் இவர் சந்திக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்திய வர்த்தக மற்றும் முதலீட்டாளர்களுடனும் இவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தியாவில் இருந்து 5,519 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை கடந்த ஆண்டு இலங்கை இறக்குமதி செய்த போதிலும், இந்தியா இலங்கையில் இருந்து 519 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை மட்டுமே இறக்குமதி செய்திருந்தது. இந்நிலையில், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நோக்குடன் அமைச்சர் பஸில் அந்நாட்டின் வர்த்தகத் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையில் போர் இடம்பெற்ற போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு நிலையை சீராகப் பேணுவதற்காக இரு நாடுகளிலும் விசேட குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் போது அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முக்கிய பங்கு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலையில்...

காலை மீட்கப்பட்டவர்களாவர். புத்தாண்டை முன்னிட்டு குறித்த சகோதரிகளின் பெற்றோர் வெளியில் சென்றிருந்த சமயம் இவர்கள் இருவரும் வீட்டில் தனிமையில் இருந்துள்ளனர். இதன்போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், இளைய சகோதரியான கீதாஞ்சலி வீட்டின் முன்னாலுள்ள விறாந்தையிலிருந்த மின்விசிறியில் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார். சகோதரியின் சடலத்தினை மீட்பதற்கான உதவிகளைச் செய்த மூத்த சகோதரி பின்னர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதன்படி சடலங்கள் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த இருவரும் ஆங்கில ஆசிரியர்களெனவும் இதில் கீதாஞ்சலி கொட்டடி நமசிவாயம் மகா வித்தியாலயத்திலும், சுவர்ணலதா கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்பித்து வந்தவர்களாவர். (எஸ்)

# யாழ். மாநகர சபையின் நடவடிக்கைகள் அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல்



யாழ். மாநகர சபையின் வருவாய் அதிகரிப்பு தொடர்பாகவும் அதிகரிக்கப்படக் கூடிய வருவாயை மக்கள் நலன்சார்ந்து நியாயமான வழிமுறைகளில் பயன்படுத்துதல் மற்றும் யாழ். மாநகரத்தின் சுத்தம் சுகாதாரம் தொடர்பில் நேற்றைய தினம் விசேட கலந்துரையாடலொன்று யாழ். மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரை யாடலில் யாழ். மாநகர சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட வர்த்தக நிறுவனங்களில் நிலுவையிலுள்ள வரித் தொகைகளை அறவிடுவது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அதேநேரம் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகள் கருதி மாநகர சபைக்குரிய வருவாயை அதிகரிப்பது தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

யாழ். மாநகரின் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற அமைச்சர் நகரின் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் தனது திருப்தி இன்மையை வெளிப்படுத்தியதுடன் நகரின் துப்பரவுப் பணிகளை ஒரு பகுதியின் பரீட்சார்த்த முறையாக தனியார்துறை வசம் ஒப்படைப்பது தொடர்பிலும் தான் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதேநேரம் கோம்பயன் மணல் மயானத்தை நவீனமயப் படுத்துவது, சுற்றுமதில் அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் வெகுவிரைவில் சுற்றுமதில் அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்ஷ்மி, உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஆணையாளர், கணக்காளர் உட்பட மாநகர சபையின் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாத காலப் பகுதியில் நாட்டிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைவிட இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களும் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகம் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலும் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளை விட இவ்வாண்டு 15.7 வீதத்தினால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நோர்வே, சுவிஸ்சர்லாந்து, வட ஆபிரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு பிரவேசித்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இடி தாக்கி யானை மரணம்

கோட்டை, ரஜமகா விகாரையைச் சேர்ந்த யானையொன்று நேற்று முன்தினம் மாலை இடி தாக்கத்துக்கு இலக்காகிய நிலையில் உயிரிழந்துள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மதச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக குறித்த யானையின் பாகன், அதனையும் அழைத்துச் சென்றுள்ளான். இந்நிலையிலேயே குறித்த யானை மீது இடி தாக்கியுதில் அது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


# துறவற வாழ்க்கையை கைவிடும் பிக்குகள்

இல்லறத்திற்கு மாறும் பௌத்த துறவிகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைய ஆண்டுகளில் அதிகளவான பௌத்த துறவிகள், தமது துறவற வாழ்க்கையை கைவிட்டு மீண்டும் லௌகீக வாழகைக்குத் திரும்பியுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் 2500 பௌத்த பிக்குகள் துறவற வாழ்க்கையை துறந்துள்ளனர். குடும்பப் பிரச்சினை, விகாரைகளில் ஏற்படும் நெருக்கடிகள், சக பௌத்த பிக்குகளுடனான முரண்பாடு, குடும்பப் பொறுப்பு, பொருளாதார நெருக்கடி, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணிகளினால் இவ்வாறு பௌத்த பிக்குகள் துறவற வாழ்க்கையை கைவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிராமபுறங்களில் காணப்படும் பௌத்த விகாரைகளுக்குக் கூடுதலான சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

# விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு கூடுதல் நிதி வேண்டும்



விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளுக்கு மிகவும் குறைவாக முதலீடு செய்யும் நாடுகளின் வரிசையிலேயே இலங்கை திகழ்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் பூஜ்ஜியம் தசம் ஒன்று ஐந்து வீதமான தொகையை மட்டுமே முதலீடு செய்கின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், ஏ[illegible]ய நாடுகள் ஒப்பீட்டளவில் அதிகளவு நிதியை ஆய்வுகளுக்காக ஒதுக்கீடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# 24 மணித்தியாலங்களில் 30 நில அதிர்வுச் சம்பவங்கள்

அனைத்து புவி சிறுதட்டுக்களிலும் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக 24 மணித்தியாலங்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் 30 நில அதிர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த நில அதிர்வுச் சம்பவங்கள் நேற்று முன்தினம் வெ[illegible]ளிக்கிழமை இரவு 9 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்றுள்ளன என்று மேற்படி புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் கூறியுள்ளது.

4 முதல் 6 ரிக்டர் அளவுகளுக்குள் பதிவாகியுள்ள மேற்படி நில அதிர்வுச் சம்பவங்களில் 15 சம்பவங்கள் சும[illegible]ராவுக்கு அருகிலான கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், வட இந்தியாவில் 4.3 ரிக்டர் அளவிலும், சீனாவில் 4.5 ரிக்டர் அளவிலும் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், ஜப்பான் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் 4 நில அதிர்வுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வாகனங்களைப் பெற்றுக்கொள்ளவும்

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் குண்டு வெடிப்புக்களின் போதும் அநாதரவான நிலையில் காணப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் நீண்டகாலமாக வவுனியா நீதிமன்றம் மற்றும் பொலிஸ நிலையங்களில் உரிமைகோரப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. எனவே வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனத்தின் உரிமை கோரக்கூடிய பத்திரங்களுடன் நீதிமன்ற அலுவலக நேரங்களில் தொடர்புகொண்டு வாகனங்களைப் பெற்றுக்கொளளுமாறு வவுனியா நீதிமன்றத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சீரற்ற கால நிலையால் கரையோரப் பகுதிகளில் அச்சம்

வடப்குதியில் நேற்று மாலை கரையோரப் பிரதேசங்களில் வீசிய கடும் காற்றினால் மக்கள் அச்சம் அடைந்தனர். தீவகம் உட்பட யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகள் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் கடும் காற்று வீசியதாகவும், சில இடங்களில் கடும் மழை பெய்ததாகவும் தெரியவருகின்றது. சில இடங்களில் மின்னல் தாக்கம் இடம்பெற்றது. இதேவேளை மூளாய் வைத்தியசாலையில் தென்னை மரங்கள் எரிந்துள்ளதாகவும், தொலைத் தொடர்பு கருவி ஒன்று பழுதடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் யாழ். குடாப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட படகுகளுக்கும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# பேருந்தில் அங்க சேஷ்டை பொலிஸில் சிக்கினார் இளைஞர்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்தில் பயணம் செய்த யுவதிகளுடன், அங்க சேஷ்டை புரிந்த இளைஞரொருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த குறித்த இளைஞர் நேற்று மாலை 4.00 மணிக்கு கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்த 62-1343 என்ற இலக்கமுடைய பேருந்தில் பெண்களுக்கு இடையே நின்று தகாத வார்த்தைகளைப் பேசியதுடன் அங்க சேஷ்டையும் புரிந்துள்ளார்.

பேருந்தில் பயணித்தவர்கள் இவ்வாறு பேசவேண்டாம் என தெரிவித்துள்ளனர். அதனை மீறி பேசிய வேளை பேருந்தில் பயணித்த மருத்துவ பீட மாணவி யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் பேருந்தை நிறுத்துமாறு பேருந்து நடத்துனரிடம் தெரிவித்துள்ளார்.

பேருந்து நடத்துனர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பேருந்தை நிறுத்தும்போது இளைஞர் நடத்துனருடன் வாக்கு வாததத்தில் ஈடுபட்டதுடன் தப்பிக்கவும் முயற்சி செய்துள்ளார். பேருந்தில் பயணித்த பயணிகள் அவரை மடக்கிப்பிடித்து யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (எஸ்)

# திடீர் அனர்த்தங்களால் 223 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நேற்றுக் காலை 7 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் திடீர் அனர்த்தங்களுக்கு இலக்கான 223 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் புத்தாண்டு கால விளையாட்டுகளினால் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக டாக்டர் பிரசாத் அரியவங்ச தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு வீதி விபத்துக்களினால் 53 பேர் சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் எனினும் இந்த வருடம் 43 பேர் மாத்திரமே சிகிச்சைகளை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கிறார். மேலும் வீடுகளில் இடம்பெறும் விபத்துக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டில் குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகிறார். எனினும் இந்த ஆண்டின் சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, நேற்றைய தினம் காலை 7 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் திடீர் அனர்த்தங்களுக்கு இலக்கான 221 பேர் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# 134 சாரதிகளுக்கு வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் கவனக்குறைவுடன் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 134 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் உயிராபத்துமிக்க மூன்று விபத்துக்களில் நால்வர் உயிரிழந்து[illegible]ளனர். பலத்த காயங்கள் ஏற்படும் வகையில் 13 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இந்த விபத்துக்களில் 20 பேர் காயமடைந்துள்ளனர். இதுதவிர ஏனைய விபத்துக்களில் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.